பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 23 புதன்கிழமை 08.09.2021 கதிர் 307

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழரசுக் கட்சி பழம் பெரும் கட்சி. நாட்டின் பழைய கட்சி – லங்கா சமசமாஜக் கட்சி. 1935இல் உருவாக்கப்பட்டது என்கின்றார்கள். அடுத்த பழமையான கட்சி ஐ.தே.கட்சி. நேற்று முன்தினம் அதற்கு 75 வயது பூர்த்தியானது. 1946 செம்ரெம்பர் பக்கம்02

# ஜெனிவாவுக்குத் தாம் எதுவுமே அனுப்பவேயில்லை என அடித்துக் கூறுகின்றனர் ஸ்ரீதரன், சாள்ஸ், கலையரசன்

## மட்டு.முதல்வர் சராவும், அரியமும் கூடக் கைவிரிக்கின்றனர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 08

இம்முறை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இருந்து சம்பந்தனுக்கு மேலதிகமாக இரண்டாவது கடிதம் ஒன்று, கட்சியின் ஒன்பது பிரமுகர்களால் ஒப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படும் விவகாரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் எம்.பிக்கள் ஸ்ரீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன் மற்றும் மட்டக்களப்பு நகர மேயர் சரவணபவன், முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் ஆகியோர் அதனை அடியோடு மறுத்துள்ளனர்.

இம்முறை எந்த அறிக்கையையும் அல்லது கடிதத்தையும் தாங்கள் 2







# அரசுக்கே ஆப்பாகும் அவசரகாலச் சட்டம்!

## நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி. எச்சரிக்கை

அரசு தற்போது பிரகடனம் செய்துள்ள அவசரகாலச் சட்டம் அரசுக்கு ஆப்பாகவே மாறப்போகின்றது.

– இவ்வாறு சபையில் வைத்து நேற்று எச்சரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன். 10



## நாட்டில் மேலும் 184 பேரை பலியெடுத்த கொரோனா!

இலங்கையில் மேலும் 184 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பலியாகியுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 504 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. 10

## 2,960 பேருக்கே நேற்று கொரோனாத் தொற்று

இலங்கையில் நேற்று நாளாந்தத் தொற்றாளர்கள் எண்ணிக்கை 3 ஆயிரத்துக்கும் குறைவாகப் பதிவாகியுள்ளது.

நாட்டில் நேற்று கொரோனா வைரஸ் தொற்றுடன் 2 ஆயிரத்து 960 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த 10

## இராணுவத்தால் படுகொலைசெய்யப்பட்ட கிருஷாந்தியின் 25ஆவது நினைவேந்தல்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் – செம்மணிப் பகுதியில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருஷாந்தியின் 25ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையிலுள்ள தமிழ்த் தேசிய 10



### வெளிப்படுத்தப்படாத சொத்துக்கள் தொடர்பான

## நிதி திருத்தச் சட்டமூலம் சபையில் நிறைவேற்றம்

வெளிப்படுத்தப்படாத சொத்துக்கள் தொடர்பான நிதி திருத்தச் சட்டமூலம் 90 மேலதிக வாக்குகளால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் மீதான விவாதம் நேற்றுக் காலை முதல் நடத்தப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு அதன் மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது குறித்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 134 வாக்குகளும், எதிராக 44 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதன்படி இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனச் சபாநாயகர் அறிவித்துள்ளார்.

வெளிப்படுத்தப்படாத சொத்துக்களை சட்டபூர்வமாக்கி, அதற்கான வரியின் பெறுமதிக்கு ஏற்றால் போன்று சமனான நிதியை முதலீடு செய்வதற்கு ஏற்ற வகையில் இந்தச் சட்டமூலம் நிதி அமைச்சரால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

## யாழில் நேற்று 10 பேர் கொரோனாவால் சாவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று 10 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று மருத்துவ அறிக்கைகள் ஊடாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மற்றும் மாவட்டச் செயலகம் ஆகியன இணைந்து வெளியிட்டுள்ள நாளாந்த அறிக்கையில் எண்மர் குறித்த 10

## வவுனியாவில் 178 பேருக்கு தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 178 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் 10

## உயிரிழந்த ஊடகவியலாளருக்கு வவுனியாவில் நேற்று அஞ்சலி!



(வவுனியா நிருபர்)

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த யாழ். சுயாதீன ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸுக்கு வவுனியாவில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியா தமிழ் 10

## கிளிநொச்சியில் ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சியில் உயிரிழந்த ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த நபருக்குத் தொற்றுள்ளமை உறுதி 10

## வவுனியாவில் ஒரே நாளில் 16 பேர் கொரோனாவால் பலி



(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று 16 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என 16 பேர் இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

நாள் ஒன்றில் வடக்கில் உள்ள மாவட்டம் ஒன்றில் பதிவாகிய அதிகபட்ச கொரோனா மரணங்கள் இதுவாகும்.

இந்நிலையில் மரணித்த 16 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

06ஆம் திகதி அது ஆரம்பிக்கப்பட்டது. டி.எஸ்.சேனநாயக்கா அதன் பிதாமகர்.

அதற்குப் பின்னர் – ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு முந்தியது – அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸுக்குப் பிந்தியது – தமிழரசு.

பிறக்கும் போதே அது இரட்டை வேடத்தில்தான் பிறந்தது என்று விமர்சிப்போர் உளர். ஆங்கிலத்தில் சமஷ்டிக் கட்சி (Federal Party). தமிழ் மக்களுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி. அதாவது தெற்குக்கு சமஷ்டிமுகம். வடக்கு, கிழக்குத் தமிழருக்கு 'தமிழரசு' முகம். 2013 மாகாண சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் பெயரில் போட்டியிட்ட தமிழ்க் கூட்டமைப்பு அமோக வெற்றியீட்டியதும், கட்சியின் உத்தியோக பூர்வ நாளிதழ் வேடம் தரித்திருந்த தினசரி மலந்தது 'தமிழரசு' என்று பீற்றியமை மறக்கக் கூடியதல்ல.

இரட்டை வேட நிலைமை பிறப்பிலிருந்து தொடர்கின்றது. இன்னும் அது மாறவும் இல்லை, திருந்தவும் இல்லை. திருந்தும் என்று நம்புவதற்கு இடமுமில்லை. கட்சிக்குள்ளும் மக்கள் மத்தியிலும் இரட்டை வேடம் போடுவோருக்குத்தான் செல்வாக்கு, பதவி உயர்நிலை. வெளிப்படையாக உண்மை பேசி, ஒற்றை 'றூட்'டில் நிற்பவர்கள் வெளியே உதறித் தள்ளி விடப்படுவார்கள். அண்மைக் கால உதாரணம் மன்னார் சிவகரன்.

கட்சியின் பழந் தலைவரிடம் தமக்கு இருக்கும் தனிப்பட்ட செல்வாக்கினாலும், தம் திறமையாலும், மக்களிடம் சற்று செல்வாக்குப் பெற்றதனாலும் சுமந்திரன் நின்று பிடிக்கின்றார். விரைவில் அவருக்கும் மூடையைக் கட்டிக் கொண்டு தமது சட்டத் தொழிலுக்கு முழுதாகத் திரும்ப வேண்டி நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கூட்டமைப்புக்குள் பங்காளிக் கட்சித் தலைவர்களாக இருக்கும் செல்வமும் சித்தார்த்தனும், அணி மாறி, விக்கி – சுரேஷ் – ஸ்ரீகாந்தாவின் வலைக்குள் வீழ்ந்துவிட்ட நிலையில், அதைக் காட்டி இந்த இரு கட்சியினருடனான சகவாசத்தைத் துண்டித்துத் தனித்துப் பயணம் புறப்படவே தமிழரசின் சிரேஷ்ட தலைவர்கள் பலரும் விரும்புகின்றனர் – மாவையரைத் தவிர.

தம்முடைய கருத்து நிலைப்பாட்டை கட்சியின் இரண்டு சிரேஷ்ட துணைத் தலைவர்களுக்கும் கடந்த ஓரிரண்டு நாள்களில் மாவையர் பகிர்ந்திருக்கின்றார் என்று தகவல். ரெலோவும், புளொட்டும் தனித்துக் கடிதம் அனுப்பியமை போல சிறிதரன், சாள்ஸ், கலையரசனும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி கடிதம் அனுப்பியிருக்கின்றார்கள், ஆகவே கடிதம் அனுப்பிய விடயத்தை மறந்து மீண்டும் இணைந்து பயணிப்போம் என்று 'சமாளிபிகேஷன்' பாங்குப் போக்கை அவிழ்த்து விட்டிருக்கின்றார் மாவை.

புளொட்டையும், ரெலோவையும் வெளியே விட்டால், அவர்கள் விக்கி – சுரேஷ் – ஸ்ரீகாந்தா அணியுடன் சேர்ந்து பலமாகி விடுவர் என்ற பயமும் மாவைக்கு. அதில் என்ன பயம் என்று நீங்கள் கேட்பது புரிகின்றது. பயம் தமிழரசுக்கோ, தமிழ் மக்களுக்கோ அல்ல. மாவைக்குத்தான்.

தமது முதலமைச்சர் கனவு அதனால் கலைந்து விடுமோ என்ற கவலை அவருக்கு. தமிழரசுக் கட்சி தனித்து நின்றால் கட்சிக்குள் தனக்கு இருக்கும் எதிர்ப்பில் முதலமைச்சர் வேட்பாளர் பதவி அடிபட்டுப் போய் விடுமோ என்ற பயம் அதிகம். ஆனால், கூட்டமைப்பின் பங்காளிகளாக ரெலோவும், புளொட்டும் இருக்கும் வரை தமிழரசின் முடிவை மீறித் தம்மை முதலமைச்சர் வேட்பாளராக்க அவை துடியாய்த் துடித்து நிற்கும் என்று நம்புகின்றார் மாவை. அது உண்மைதான். மாவையே தொடர்ந்து தமிழரசுத் தலைவராகவும் இருந்து, அவரே முதலமைச்சர் வேட்பாளராகவும் நின்றால்தான் தமிழரசின் செல்வாக்குச் சரியும், வடக்கு, கிழக்கில் தத்தமது கட்சிகள் வளரும் என்ற மனக்கணக்கு ரெலோ, புளொட் தலைவர்களுக்கு.

கடந்த ஞாயிறன்று தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு மெய்நிகர் முறையில் கூடியதல்லவா? அதில் இரண்டு விடயங்கள் குறிப்பிட வேண்டும்.

ஒன்று – அதில் பங்கு பற்றிய தொண்ணூறு வீதமான உறுப்பினர்கள் ஒரு விடயத்தை ஏகமனதாய் சுட்டிக்காட்டினர். அது – கூட்டமைப்பை தமிழரசு உடைக்கக் கூடாது, கூட்டமைப்பிலிருந்து யாரையும் நாங்கள் வெளியேற்றவும் இல்லை, வெளியேற்றவும் கூடாது. இப்போது விக்கி – சுரேஷ் – ஸ்ரீகாந்தா அணியுடன் கை கோர்த்து புளொட்டும், ரெலோவும் கூட்டமைப்பை விட்டு தாங்களாகவே வெளியேறி விட்டன, அதை வெளிப்படுத்துவதுடன் அப்படியே விட்டு விடுங்கள், நாங்கள் அவர்களை அனுப்பவில்லை, அவர்களாகவே போய்விட்டார்கள், அவர்கள் அப்படியே வெளியில் நின்று செயற்படட்டும், மீள வெற்றிலை வைக்க வேண்டாம் என்பது ஒன்று.

அடுத்தது – அந்தக் கூட்டத்துக்கு முதல் நாள்தான் ரெலோவும் புளொட்டும், விக்கி – சுரேஷ் – ஸ்ரீகாந்தா அணியுடன் சேர்ந்து அதிரடியாக ஜெனிவாவுக்குப் பொதுக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தன. அதனால் ஏற்பட்ட நெருக்கடியை ஆராயவே அவசர அவசரமாக அந்த மெய்நிகர் முறையில் அரசியல் குழு ஞாயிறன்று கூட்டப்பட்டது.

கூட்டத்தின் இடையே, கூட்டத்தை அழைத்த பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கம் ஒரு கேள்வியைக் கேட்டார்.

*"எங்களுக்குத் தெரியாமல் ரெலோ, புளொட் தலைவர்கள் விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், ஸ்ரீகாந்தாவுடன் சேர்ந்து இப்படிக் காய் நகர்த்தியிருக்கின்றார்கள். அது பற்றிய செய்தி நேற்றுத்தான் (சனியன்றுதான்) வெளிவந்திருக்கின்றது. நாம் பதறியடித்து விடயங்களைத் தேடுகிறோம். ஆனால் அதற்குப் பிறகும் நேற்றிரவோ அல்லது இன்று காலையோ அதே தலைவர்களுடன் நீங்கள் மெய்நிகர் கலந்துரையாடல்களை நடத்தியிருக்கின்றீர்கள் என்று அரசல் புரசலாகக் கதை அடிபடுகின்றது. யார் பேசினீர்கள்? என்ன பேசினீர்கள்? சொல்லுங்கள்."* – என்று கேட்டார் சத்தியலிங்கம்.

தலைவர் மாவை சேனாதிராசா உட்பட எல்லோரும் பம்மிக் கொண்டிருந்தார்கள். ஒருவரும் பதில் சொல்லவில்லை. அப்படிக் கூட்டம் ஏதுமே நடக்கவில்லை என்ற மாதிரி நடித்துக் கொண்டனர்.

உண்மையில் தமிழரசுக் கட்சியின் அந்த அரசியல் குழுக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பும் ஒரு கூட்டம் நடந்திருக்கின்றது.

அதில் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாவையும் இன்னும் இரண்டு பிரமுகர்களும் இருந்திருக்கின்றனர். அந்தக் கலந்துரையாடலில் நீதியரசர் விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சுரேன் குருசாமி, சுரேஷ் பிறேமச்சந்திரன், அவர் சகோதரர் சர்வேஸ்வரன், அனந்தி சசிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், ஸ்ரீநேசன், மட்டக்களப்பு மேயர் சரவணபவன் எல்லோரும் பங்கு பற்றியிருக்கின்றனர்.

வில்லன்களுடன் சேர்ந்து இரண்டு மணித்தியாலத்துக்கு முன்னர் கலந்துரையாடல் நடத்தி விட்டு வந்துதான் திரும்பவும் அந்த வில்லன்களின் நடவடிக்கை தொடர்பில் தமிழரசின் அரசியல் குழு என்ன செய்வது என்ற நடவடிக்கை பற்றி ஆராயும் அரசியல் குழுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்திருக்கின்றார் மாவையர்.

சரி, உள்ளத்தில் கள்ளம் இல்லை என்றால், பதில் பொதுச் செயலாளர் கேட்ட கேள்விக்கு நியாயமான பதிலை மாவையோ அந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய மற்றிருவரோ அளித்திருக்கலாம் அல்லவா? அளிக்கவில்லை. ஏன்? எல்லாம் சுயநல அரசியல்தான். குசும்பு பண்ணும் ரெலோ, புளொட்டை அரவணைத்து வைத்தால்தான் தனது கனவு சாத்தியப்பட அவை உதவும், அதனல்தான் தமிழரசுக் கட்சியை இக்கட்சிகள் அழித்தாலும், தமிழரசு அழிந்து விட்டுப் போகட்டும், அவற்றின் (ரெலோ, புளொட்டின்) ஆதரவில் நான் முதலமைச்சராகி விட வேண்டும் என்ற ஒரே நப்பாசைதான்.

ஸ்ரீதரன், கலையரசன், சாள்ஸ் நிமலநாதன் எல்லோரும் சம்பந்தரின் கடிதத்துக்குப் புறம்பாக இன்னொரு கடிதம் அனுப்பினர் என்ற கதை இப்போது அவிழ்த்து விடப்பட்டதன் பின்னாலும் ஒரு சாணக்கிய சூத்திரம் உள்ளது. அதைப் பிறகு – தொடர்ந்து – பார்ப்போம்.

– மின்னல் –

## ஜெனிவாவுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒப்பமிட்டு ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு அனுப்பவில்லை என்று அவர்கள் காலைக்கதிருக்குத்தெரிவித்தனர்.

இப்படியான ஒரு கடிதம் இரண்டாவது தரப்பினரால் தமிழரசுக் கட்சிக்குள் இருந்து அனுப்பப்பட்டு இருப்பதாக நேற்றுக் காலை இணையத்தளம் ஒன்றில் செய்தி வெளியானது.

அது குறித்துக் கருத்துக் கேட்ட போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் ஒருவராகப் பெயர் குறிப்பிடப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தொலைபேசி அழைப்புகளுக்குப் பதில் தரவில்லை.

அதேவேளை இந்த இரண்டாவது கடிதத்தில் யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் நடராஜா ஆகியோரும் ஒப்பமிடுள்ளனர் என்று இணையத்தில் வெளியான அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இத் தகவல் தொடர்பில் அவர்களது பிரதிபலிப்பையும் பெற முடியவில்லை.

# மரண அறிவித்தல்



**பொன்னாலையை பிறப்பிடமாகவும்,**
**மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட**

## கோவிந்தபிள்ளை இராமச்சந்திரன்

**ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், யாழ் மத்திய பேரூந்து நிலையம், இலங்கைப் போக்குவரத்துச் சபை)**

பொன்னாலையை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், யாழ் மத்திய பேரூந்து நிலையம், இலங்கைப் போக்குவரத்துச் சபை) அவர்கள் 06.09.2021 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை – தெய்வானை தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற ஆறுமுகம் – சின்னத்தங்கம் ஆகியோரின் மருமகனும், தேவமணியின் பாசமிகு கணவரும், அமரர் ராஜேஸ்வரி, சிவனேஸ்வரி, யோகேஸ்வரி, ஆகியோரின் சகோதரரும் வைத்தியகலாநிதி சுஜித்தா அகிலன் (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை), வைத்திய கலாநிதி யசித்தா அன்பழகன் (குயின் எலிசபெத் வைத்தியசாலை, கிங்ஸ்லின், பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலன் (பொறியியலாளர், உரிமையாளர் வசந்தம் பாமசி), அன்பழகன் (சிரேஷ்ட விரிவுரையாளர் CLC), ஆகியோரின் மாமனாரும், சஞ்சனா, அவிரோன், பிரனேஷ் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.09.2021 கோம்பயன் மணல் இந்துமயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**தகவல்**
**குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு -**
**077 9103594**
**076 588 7252**
**0044 7727177375**

Study in UK
• Minimum Requirement : GCE O/L (London or Local)
• IELTS minimum 4.0 average preferred
• Can apply without IELTS too
• Foundation / Diploma / Bachelors / Masters Programs
• Easy Visa Procedure / 28 days Bank Balance only required.
• Choice of Many Universities – Inner and Outer London
• Part time work during term time / Full time work during holidays.
SIC
Scholars Information Center
No. 527-1/1, First Floor, Galle Road,
Wellawatte, Colombo 06.
Call : 0763 944 378

## அரசியல் பழிவாங்கலால் புதுப்பிக்கப்படாத

# இரு மது விற்பனை நிலையங்களுக்கு புதிய அனுமதிப்பத்திரம் கொடுங்கள்!

### மேன் முறையீட்டு நீதிமன்றம் எழுத்தாணை

பிரதேச மது வரி அதிகாரிகள், அரசியல்வாதிகளின் பழிவாங்கல் காரணமாக, தமது மது விற்பனை நிலைய அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படாமை தொடர்பில், மது விற்பனை நிலைய உரிமையாளர்கள் இருவர் தாக்கல் செய்த எழுத்தாணை கோரும் மனுக்களை (ரிட் மனுக்கள்) விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேன் முறையீட்டு நீதிமன்றம், அவர்களுக்கு புதிய மது வரி அனுமதிப் பத்திரம் வழங்குமாறு, மதுவரி ஆணையாளர் நாயகத்துக்கு எழுத்தாணை பிறப்பித்தது.

மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித்த ராஜ கருணாவின் இணக்கப்பாட்டுடன், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தம்மிக கனேபொல இந்தத் தீர்ப்பை அறிவித்தார்.

களனி பகுதியைச் சேர்ந்த கே.டி.டி. சில்வா மற்றும் கே.டி. பிரியதர்ஷன ஆகியோர் தாக்கல் செய்த ரிட் மனுக்களை விசாரணை செய்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த வழக்கில் மது வரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட சிலர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டிருந்தனர்.

மேன் முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

மனுதாரர்கள் பல பிரதேசங்களில் மது விற்பனை நிலையங்களை நடாத்தி வரும் வர்த்தகர்களாவர்.

மதுபான விற்பனை நிலையங்களின் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காமை தொடர்பிலேயே மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். மதுபான சாலை அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்து, புதிய அனுமதிப்பத்திரம் வழங்குமாறு எழுத்தாணை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

இதற்கு முன்னர் மதுவரித் திணைக்களத்தின் பிரதேச அதிகாரிகள் அரசியல்வாதிகளின் இடையூறுகளுக்கு முகம் கொடுத்துள்ளமையால், அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காமை தொடர்பில் மனுதாரர்கள் நீதிமன்றை நாடியுள்ளனர்.

மனுதாரர் கடந்த 2001 ஆம் ஆண்டு அரசாங்கம் மாறிய பின்னர் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்திடம் தமது அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்குமாறு கோரியுள்ளனர். எனினும் அது நடக்கவில்லை. பின்னர் மனுதாரர்கள் தமது கோரிக்கையை அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முன் வைத்துள்ளனர். முறைப்பாடாக முன் வைக்கப்பட்டுள்ள குறித்த விடயத்தை முன்னாள் ஜனாதிபதி மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பியுள்ளார்.

பின்னர் மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் அது தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கையின் பிரகாரம், 5 வருடங்கள் கடந்துவிட்டதால் மதுவரி கட்டளைகள் மற்றும் கொள்கைகளுக்கு அமைய மதுவரி அனுமதிப் பத்திரம் வழங்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் இந்த மதுவரிக் கட்டளைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் தேடிய போதும் அது தொடர்பில் அறிய முடியவில்லை என மன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் இதற்கு முன்னர் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள, எடுத்துக்காட்டு வழக்கான விஜேசேகர வழக்கையும் ஆராயும் போது, மதுவரி திணைக்கள ஆணையாளர் நாயகம் கடமை தவறியுள்ளார் என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

அதனால் மனுதாரர்களுக்கு குறித்த அனுமதிப்பத்திரங்களை வழங்குமாறு மதுவரி ஆணையாளர் நயகத்துக்கு இந்த மன்றம் எழுத்தாணை பிறப்பிக்கின்றது. - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் மனுதாரர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ருக்ஷான் சேனாதீரவின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன ஆஜரானார்.

பிரதிவாதிகளுக்காக சட்ட மா அதிபர் சார்பில் அரச சட்டவாதி பேராசிரியர் சாருக ஏக்கநாயக்க ஆஜரானார்.

# அஸாத் சாலியை விடுதலை செய்ய நீதிமன்றில் கோரிக்கை முன்வைப்பு

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் சாலிக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அல்லது ஐ.சி.சி.பி.ஆர். எனும் சிவில் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் கீழ் எந்த சாட்சியங்களும் இல்லாதமையால் அவரை விடுதலை செய்ய வேண்டும் என நீதிமன்றில் கோரப்பட்டுள்ளது.

அஸாத் சாலி விவகார வழக்கு விசாரணைகள், கடந்த திங்கட்கிழமை நகர்த்தல் பத்திரம் ஊடாக கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

நீதிவானின் உத்தியோகபூர்வ அறையில் வழக்கு விசாரணைக்கு வந்துள்ளது.

இதன்போது அஸாத் சாலி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன ஆஜராகியுள்ளார்.

சி.ஐ.டி. முன்னெடுத்த விசாரணைகளின் தொகுப்பு மன்றில் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதில் அஸாத் சாலிக்கு எதிராக எந்த சான்றுகளும் இல்லை என ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, அஸாத் சாலியை விடுவிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது மன்றில் பிரசன்னமாகியுள்ள சி.ஐ.டி. அதிகாரிகள், இந்த விடயம் தொடர்பில் சட்ட மா அதிபரின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளவும், அத்திணைக்களத்தின் உதவியை பெறவும் கால அவகாசம் வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

அதன்படி அதற்கான கால அவகாசத்தை அளித்துள்ள நீதிமன்றம் எதிர்வரும் 13 ஆம் திகதி இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்கவுள்ளது.

முன்னதாக கடந்த மார்ச் 16 ஆம் திகதி, அஸாத் சாலி கொள்ளுப்பிட்டி பகுதியில் காரில் பயணித்துக்கொண்டிருந்த போது சி.ஐ.டியின் விசேட விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ஜயந்த பயாகல தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து அஸாத் சாலியை தடுத்துவைத்து விசாரணை செய்வதற்கான அனுமதியை, பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த மார்ச் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வழங்கியுள்ளார். அரசமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடை சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ் இந்த தடுப்புக் காவல் அனுமதி ஜனாதிபதியால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. அஸாத் சாலி கைது செய்யப்பட்டு, பொலிஸ் அத்தியட்சகர் ஒருவருக்கு உள்ள அதிகாரத்தின் கீழ் 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டதன் பின்னர் இந்த 90 நாள் தடுப்புக் காவல் அனுமதி பெறப்பட்டுள்ளது.



தீவிரவாத பயங்கரவாத சந்தேக நபர்களுடன் தொடர்பு வைத்திருந்தமை, தீவிரவாத பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உதவியளித்தமை மற்றும் உடந்தையாகவிருந்தமை, வன்முறை அல்லது மத, இன அல்லது சமூக ரீதியான விரோதத்தை தூண்டும் வகையில் அல்லது வேறுபட்ட சமூகங்கள் அல்லது இனங்கள் மத குழுக்களுக்கிடையில் பகைமையை தூண்டும் விதத்தில் வார்த்தைகளை பயன்படுத்தியமைக்காகவும் மற்றும் 21.04.2019 அன்று நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் இந்த சந்தேக நபருக்கு உள்ள தொடர்பை உறுதிப்படுத்துவதற்கான மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவும் அவரை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதிப்பதாக ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ள தடுப்புக் காவல் உத்தரவு அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி கடந்த 19 ஆம் திகதி முதல் 90 நாள்களுக்கு அவரைத் தடுத்து வைக்க அனுமதிப்பதாக ஜனாதிபதி குறித்த அனுமதியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் தொடர்ச்சியாக சி.ஐ.டியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஸாத் சாலி, கடந்த மே 18 ஆம் திகதி திடீர் சுகவீனம் காரணமாக சி.ஐ.டியினரால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். இதன் போதே அவருக்கு இருதய கோளாறுக்கான சிகிச்சைகள் அங்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையிலேயே கடந்த ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி, வைத்தியசாலைக்கு சென்று பார்வையிட்ட கொழும்பு பிரதான நீதிவான், தடுப்புக் காவல் விசாரணை நிறைவுற்றுள்ளதைக் கருத்தில் கொண்டு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பொப் பாடகர் சுனில் பெரேராவுக்கு ஆஸ்திரேலிய அமைச்சர் இரங்கல்

ஆஸ்திரேலியாவின் சுங்க, சமூகப் பாதுகாப்பு மற்றும் பன்முக கலாசார விவகாரங்களுக்கான உதவி அமைச்சர் ஜேசன் வூட், இலங்கையின் புகழ்பெற்ற இசைக்கலைஞர் மறைந்த சுனில் பெரேராவுக்கு அஞ்சலி செலுத்தியதோடு தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொப்பிசைப்பாடல் கலாசாரத்தில் மிக முக்கியமானவராகக் கருதப்படக்கூடிய பிரபல பாடகர் சுனில் பெரேரா கடந்த திங்கட்கிழமை அவரது 68 ஆவது வயதில் காலமானார்.

இந்நிலையில், அன்னாருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்கள் மற்றும் இரங்கலை தெரிவிப்பதோடு, அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் துக்கத்தில் இருக்கும் இலங்கையர்களுக்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் என ஆஸ் திரேலிய அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜேசன் வூட் மேலும் தெரிவிக்கையில், சுனில் ஆஸ்திரேலியாவுக்கு வழக்கமாக வரும் ஒரு நபர், ஒவ்வொரு முறையும் அவர் நாட்டுக்கு வருகை தரும்போது கூட்டம் நிரம்பி வழியும் எனத் தெரிவித்துள்ளார்.

## கோட்டாபய போன்ற சர்வாதிகாரி இலங்கைக்கு கட்டாயம் தேவை!

### அமைச்சர் இந்திக அனுருத்த கூறுகின்றார்

இலங்கைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போன்ற சர்வாதிகாரி தேவை என இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை உரை யாற்றிய அனுருத்த, நாடாளுமன்ற உறுப்பினராக, தாம் சர்வாதிகாரத்தை ஆதரிக்கிறேன் எனக் கூறினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வாதிகாரத்தை தனிப்பட்ட முறையில் விரும்புகிறார் என அவர் தெரிவித்தார். சர்வாதிகாரம் நாட்டின் பல பிரச்சினைகளைத் தீர்க்க உதவியது என்று அமைச்சர் கூறினார்.

எதிர்க்கட்சிகள் கடந்த காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷவை ஒரு சர்வாதிகாரியாக சித்திரித்தனர் எனவும், இப்போது கூட அதை உணர்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஒட்சிசன் தேவையை உடைய நோயாளர் எண்ணிக்கை வீழ்ச்சி

ஒட்சிசன் தேவையுடைய கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களுடன் ஒப்பீடு செய்யும் போது ஒட்சிசன் தேவையுடைய கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் ஒட்சிசன் மேலதிகமாக தேவைப்பட்டால் அதற்கும் ஆயத்தமாக இருக்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை விடவும் உள்நாட்டில் அதிகளவு ஒட்சிசனை உற்பத்தி செய்வதே பொருத்தமானது என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, அண்மையில் 3 லட்சத்து 60 ஆயிரம் லீற்றர் திரவ ஒட்சிசனை இறக்குமதி செய்ய அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கறுப்பை வெள்ளையாக்கும் சதி

**ராஜபக்ஷ அரசின் சிறுமைத்தனமான மற்றொரு காரியம் நேற்று அரங்கேறியிருக்கின்றது. அது 'நிதிச் சட்டம்' என்ற பெயரில் கறுப்புப் பணத்துக்கு வரிவிலக்குடன் சட்ட அங்கீகாரம் அளிக்கும் சட்ட மூலத்தை நிறைவேற்றியதாகும்.**

**அரசு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தடுமாறுகின்றது. அந்நிய செலாவணி அடியோடு கரைந்து விட்டது. அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்யக் கூடப் பணம் இல்லை. வெளிநாட்டுத் தரப்புகள் முதலீடு செய்யத் தயாரில்லை. வாங்கிய கடன்களுக்குத் தவணைக் கட்டணம் செலுத்தவும் நாட்டிடம் நிதி இல்லை.**

**இந்தச் சமயத்தில் வெளிநாட்டில் இருந்து அந்தந்த நாணயங்களில் நாட்டுக்குப் பணம் வந்தால்தான் அந்நிய செலாவணி கொஞ்சமாவது தேறும்.**

**ஆகவே வெளிநாட்டில் பணத்தை வைத்திருக்கும் இலங்கையர்களும், பிறரும் நாட்டுக்குள் தாராளமாகப் பணம் கொண்டு வரலாம், அந்தப் பணம் எப்படி வந்தது, மூலம் யாது என்ற கணக்குகளைக் காட்டத் தேவையில்லை, அந்த வருமானம் ஈட்டலுக்கான வரி கூட விதிக்கப்படமாட்டாது, அது மாத்திரமல்ல, அப்படி நாட்டுக்குள் கொண்டு வரப்படும் பணம் பற்றிய இரகசியம் பேணப்படும் – இப்படி எல்லாம் சட்ட விலக்களிக்கும் சட்டமே நேற்றுக் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.**

**அதாவது கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கும் சட்ட ரீதியான அங்கீகாரம் இது.**

**இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், இப்படி வெளிநாட்டு முதலுக்கு சட்டக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்து விலக்களிக்கும் விசேட சட்டங்கள் கொண்டு வரப்படுவது இது முதல் தடவையல்ல. ஒரு டசின் தடவைகளுக்கு மேல் செய்தாயிற்று. போதிய பலன் கிடைக்கவில்லை என்பதுதான் பெறுபேறு.**

**முன்னைய காலங்களில் வரி விலக்குச் சட்டங்கள் என்ற பெயரிலேயே அவை கொண்டு வரப்பட்டன. இப்போது 'நிதிச் சட்டம்' என்ற பெயரில் அது வருகின்றது.**

**இந்தச் சட்டத்தை ஒட்டிக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் முக்கியமானவை.**

**ஒன்று – இப்படி காலத்துக்குக் காலம் வரி விலக்கு, கணக்குக் காட்டத் தேவையில்லை என்ற சலுகைகளை வழங்குவது மக்களை இனிமேல் வருமானத்தை வெளிப்படுத்தி வரி செலுத்தத் தேவையில்லை, அடுத்த தடவை வரி விலக்கு வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தைத் தூண்டி நிற்கும்.**

**கறுப்புப் பணம், போதைவஸ்து வியாபாரம், பயங்கரவாதம் போன்றவை மூலம் ஈட்டும் பணத்தையும், சட்ட ரீதியானதாக்கி, வெள்ளைப் பணமாக்கித் தருகின்றது இம்முறைமை.**

**இந்த வரி விலக்கினால் நாட்டுக்கு முப்பதாயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்படும் என்று வருமானவரி அதிகாரிகள் தொழிற்சங்கம் கூறியிருப்பதை எந்த அதிகாரிகளோ, நிதி அமைச்சோ இன்னும் மறுக்கவில்லை என்பதையும் சுமந்திரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.**

**முன்னைய இருண்ட கால ஆட்சியின் போது பெருமளவு தொகை 'கொமிஷனாக' அறவிடப்பட்டு டொலர்களில் வெளிநாடுகளில பதுக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது. பதுக்கினோரே அந்தக் கறுப்புப் பணத்தை வெள்ளையாக நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு வசதி செய்கின்ற நடவடிக்கையே இது. இப்படி பணத்தைக் கொண்டு வருவோர் பற்றிய விவரங்களும் இரகசியமாகப் பேணப்படும் என்றால், கறுப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றியோர் விவரமும் வெளிவராது. பிறகென்ன?**

**உழைத்துக் கறுப்பாகப் பதுக்கி வைத்திருந்ததை அவர்களே வெள்ளையாக மாற்றும் – அவர்களே கொண்டு வந்து ஒப்பேற்றும் – தந்திரம்தான் இது.**

**நாடு இன்று பொருளாதாரத்தில் இப்படி நொடிந்து போய்க் கிடப்பதற்கும் அவர்களின் சுரண்டலே காரணம். அதற்கு – வீழ்ந்து போயிருக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கு – ஒத்தடம் கொடுக்கும் சாட்டில், இது வரைச் சுரண்டிப் பறித்ததை சுத்தமானதாக்கும் வேலை இது! நல்ல தந்திரம் தான்.**

# போராட்டங்களை ஒடுக்கவே அவசரகாலச் சட்டம் பிரகடனம்

## ரஞ்சித் எம்.பி. தெரிவிப்பு

அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டங்களை ஒடுக்கவே அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகால பிரகடனம் தொடர்பான விசேட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அவசரகாலச் சட்டம் நீண்ட காலத்துக்குப் பின்னர் இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. யுத்தமொன்று இடம்பெறும்போதோ, வன்முறைச் சம்பவங்களின்போதே, அல்லது கட்டுப்படுத்தமுடியாத பிரச்சினைகளின்போதே அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆனால், இலங்கை வரலாற்றில் முதன் முறையாக பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் இயலாமையே இதன் ஊடாகத் தெரிகிறது.

கொரோனாவைக் கட்டுப்படுத்தவோ பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தவோ அன்றி, மக்களின் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை ஒடுக்கவே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவத்துக்குத்தான் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாம் இராணுவத்தை எதிர்க்கவில்லை. ஆனால் இராணுவம் என்பது யுத்தத்துக்காகப் பயன்படுத்த வேண்டிய ஒன்றாக இருக்கும் போது, பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த இந்தத் தரப்பினருக்கு எவ்வாறு முடியும் என்பதுதான் எமது கேள்வியாகும்.

பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த ஓர் அரசாங்கத்தால் முடியாதுள்ளமை வெட்கத்துக்குரியதாகும் எனக் கூறினார்.

# பணத்தை அச்சிடுவதையே அரசு நன்றாக செய்கிறது!

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு

இந்த அரசாங்கம் பணத்தை அச்சிடுவதை மட்டுமே நன்றாக செய்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அச்சு மை தீரும் வரையில் அரசாங்கம் பணம் அச்சிடும் என அவர் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதற்கு அரசாங்கம் அவசரப்பட்ட போதிலும் கொவிட் கட்டுப்பாடு குறித்த சட்டங்களை அமுல்படுத்த அரசாங்கம் அவசரப்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கான எதிர்ப்பு நாளுக்கு நாள் வலுவடைந்து வரும் நிலையில், அடக்குமுறைகளை அரசாங்கம் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது என முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

# உணவுத் தட்டுப்பாடு நாட்டில் இல்லையாம்

## அமைச்சர் மஹிந்தானந்த கூறுகின்றார்



இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படவில்லை என்றும் நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்கக்கூடிய வகையில் அரிசி, மரக்கறி உள்ளிட்ட உணவுப்பொருள்கள் நாட்டில் உள்ளன என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகால பிரகடனம் தொடர்பான விசேட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஒகஸ்ட் 30 ஆம் திகதி அவசரகால பிரகடனம் வர்த்தமானி ஊடாக அறிவிக்கப்பட்டது. இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு 14 நாள்களுக்குள் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே, இதனை நாடாளுமன்றின் ஊடாக செயற்படுத்த முடியும்.

இவ்வாறானதொரு சட்டம் நாட்டுக்குத் தேவையில்லை என்றால் இதனை நிறைவேற்றத் தேவையில்லை. அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்படுவது ஒன்றும் இது புதிதல்ல. கடந்த காலங்களில் வெல்லம்பிட்டியவில் குப்பை மேடு சரிந்துவிழுந்த காலத்தில் கூட, நல்லாட்சியாளர்கள் அவசரகால சட்டத்தைக் கொண்டுவந்திருந்தார்கள்.

இன்று சர்வதேச செய்திகளில் இலங்கையில் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், இலங்கையில் உணவுத்தட்டுப்பாடு கிடையாது என்பதை நான் அனைவருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கு உணவு மாபியாவே இடம்பெற்று வருகிறது.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த அவசரகாலப் பிரகடனம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் எனும் ரீதியில் மக்களுக்குத் தட்டுப்பாடு இன்றி உணவு வழங்க வேண்டியது எமது கடமையாகும். விவசாயத்துறை அமைச்சர் என்ற வகையில் நான் ஒன்றைக் கூற வேண்டும்.

கடந்த காலங்களில் இரண்டு போகத்தையும் சேர்த்து நாம் 8 லட்சம் ஹெக்டேயருக்கு நெற்பயிர்ச் செய்கை செய்துள்ளோம். 53 லட்சம் மெற்றிக் தொன் நெல்லை உற் பத்தி செய்துள்ளோம்.

இதனை 1.6 ஆல் பிரித்தால் 32 லட்சம் மெற்றிக் தொன் அரிசி எம்மிடம் தற்போது உள்ளது. இதனால், இலங்கையில் ஒருபோதும் உணவுத்தட்டுப்பாடு ஏற்படவில்லை என்பதை நான் இங்கு உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

இந்நிலையில், அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவ ஆட்சிக்கு ஜனாதிபதி வழிவகுக்கிறார் என எதிர்க்கட்சியினர் கூறி வருகிறார்கள்.

ஆனால், கடந்த காலங்களில் எதிர்க்கட்சியினரால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு போராட்டத்தையும் தண்ணீர் தாரை பிரயோகத்தை மேற்கொண்டோ, தடியடி நடத்தியோ ஜனாதிபதி கட்டுப்படுத்தவில்லை. போராடிய எவரையும் கைது செய்யவுமில்லை. அவசரகாலச் சட்டத்தை அன்றே கொண்டுவந்து ஜனாதிபதியால் போராட்டங்களை கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

ஆனால், அவர் அன்று அவ்வாறு செய்யவில்லை என்பதை எதிர்க்கட்சியினர் புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு, இந்த அவசரகாலச் சட்டம் மக்களுக்காக கொண்டுவரப்பட்டது என்பதையும் இவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். - எனக் கூறினார்.

# வடக்கில் மின்தகனமேடை போதாமையால் திக்குமுக்காடும் உள்ளூராட்சி மன்றங்கள்!

## புதிய தகன மேடைகளை உருவாக்க அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்

● ந.லோகதயாளன்

கொரோனாவின் காரணமாக அதிகரித்த மரணங்கள் காரணமாக தேங்கும் உடல்களை தகனம் செய்வதில் உள்ளூராட்சி மன்றங்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றன.

வடக்கு மாகாணத்தில் இரு இடங்களில் மட்டுமே மின் தகன மயானங்கள் உள்ளன. அவை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் உள்ளன. இவற்றில் நாளொன்றுக்கு சாதாரணமாக 6- 8 உடல்களை தகனம் செய்தால் மட்டுமே தகன மேடையை தொடர்ந்து பேணிப் பராமரிக்க முடியும். ஆனால் தற்போது 10 இற்கும் குறையாமல் தகனம் செய்யப்படுகின்றன. ஏனெனில் வடக்கு மாகாணத்தில் தற்போது நாள் ஒன்றுக்கு 15 வரையான மரணம் நிகழ்கின்றது. இதனால் வைத்தியசாலைகளில் இறந்தவர்களின் உடல்கள் தேங்கிக் கிடக்கின்றன.

இவ்வாறு உயிரிழப்பவர்களின் உடல்களை அதிகரித்து தகனம் செய்ய முடியாதா? இதற்கு மாற்றுவழிகள் இல்லையா? என யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணையாளர் து.ஜெயசீலனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது –

சாதாரணமாக உயிரிழந்தவர்கள் அன்றி கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலம் என்பதால் அதனை அடக்கம் செய்யும் தொழிலாளர்களது பாதுகாப்பு ஒரு முக்கிய விடயம். இதற்கு அப்பால் தற்போதுள்ள தகன மேடையில் ஒரு தடவையில் ஓர் உடல்தான் தகனம் செய்ய முடியும். இதேநேரம் ஓர் உடல் தகனம் செய்ய ஒரு மணிநேரம் போதுமானது. ஆனால் அந்த வெப்பம் தணிய ஒரு மணிநேரம் போதாது அந்த நேரத்துக்கும் மேலாகக் காத்திருக்க வேண்டும். இல்லையேல் தகன மேடை மட்டுமன்றி அந்தத் தொகுதியே முழுமையாக அழிவடைந்து விடும். இதனால் அதன் பின்பு திருத்துவது பெரும் கடினமானது. இருந்த போதும் நெருக்கடி நிலைமையைக் கருதி 3 உடல்களை 4 ஆக அதிகரித்தோம் பின்னர் தற்போது 5 உடல்களை எரிக்கின்றோம். இதனால் தகன மேடை அதிக வெப்பமடைவது மட்டுமன்றி அதன் தொகுதியும் அடிக்கடி பழுதடைகின்றது. கடந்த இரு மாதங்களில் 3 தடவை பழுதடைந்த நிலையில் பெரும் சிரமத்தின் மத்தியில் திருத்தம் செய்யப்பட்டது. தற்போது 6 ஆக அதிகரிக்க கோரிக்கை விடப்படுகின்றது. அது ஒரு சவாலான பணியாகவே இருக்கும்.







இதேநேரம் சாதாரணமாக ஓர் உடல் எரிக்க 30 கிலோ எரிவாயு தேவை. தற்போது 40 கிலோவரையில் தேவைப்படுகின்றது. அதற்கான காரணம் உடல்கள் குளிரூட்டியில் இருந்த தன்மையால் மேலதிகமாக 10 கிலோ எரிவாயு தேவைப்படுகின்றது. மேலதிகமாக 10 கிலோ எரிவாயு தேவை என்ற விடயம் நிதிச் செலவு அல்ல அதில் முக்கிய விடயம் அந்தளவு வெப்பம் தகன மேடையைத் தாக்குவதே பிரச்சினையாகவுள்ளது.

இதேநேரம் கொரோனா காரணமாக உயிரிழப்பவர்களுக்கு உடல்கூற்று பரிசோதனை இடம்பெறுவது கிடையாது இதனால் அண்மையில் கொரோனாவால் உயிரிழந்த ஒருவரின் உடலம் தகனத்துக்காக வந்தபோது அவர் ஓர் இதயத் துடிப்பு நோய் காரணமாக மின்கலம் பொருத்தியிருந்தமை எமக்குத் தெரியாது. எவரும் தெரியப்படுத்தவும் இல்லை.

இவ்வாறு மின்கலம் பொருத்தியவரின் உடலம் தகனம் செய்யப்படும்போது மின்கலம் சத்தத்துடன் வெடித்தது. இதனைத் தொழிலாளர்கள் ஆராய்ந்தபோதே இறந்தவர் உடலில் மின்கலம் பொருத்திய விடயம் தெரிய வந்தது. இதனாலும் தகன மேடை சிறு சேதம் அடைந்தது. இதேநேரம் காலை 8 மணிக்குப் பணியை ஆரம்பிக்கும் தொழிலாளர்கள் பணி முடிய தினமும் இரவு 10 மணியாகின்றது. இதன்பின்பு தோய்ந்து வீடு செல்ல 11 மணியாகும் நிலைமையிலேயே அவர்கள் மறுநாள் காலையில் 8 மணிக்கு முன்பு பணிக்கு வர வேண்டும். இத்தனை நெருக்கடிக்கும் மத்தியில்தான் இந்தப் பணி இடம்பெறுகின்றதே அன்றி இது ஓர் இலகுவான பணி அல்ல. – என்றார்.

இவ்வாறு தகனம் செய்யப்படும் உடல்களுக்கு வைத்தியசாலைகளில் காணப்படும் நெருக்கடி தொடர்பில் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒரே தடவையில் 20 உடல்கள் மட்டுமே வைத்துப் பராமரிக்க முடியும் ஆனால் தற்போது மேலதிகமாக உள்ளன.

வடக்கு மாகாண வைத்தியசாலைகளின் சவச்சாலைகளில் தேக்கத்தில் தற்போது 52 கொவிட் உடலங்கள் எரியூட்டுவதற்காகக் காத்திருக்கின்றன. இதில் யாழ். போதனா வைத்தியசாலையில் 20 உடலங்கள் காணப்படுகின்றமையுடன், யாழ் மாவட்டத்தின் ஏனைய வைத்தியசாலைகளையும் சேர்த்து 31 உடலங்கள் உள்ள அதேநேரம் கிளிநொச்சியில் 9 உடலங்களும், முல்லைத்தீவு, மன்னார், வவுனியாவில் 12 உடல்களுமாகவே இந்த 52 உடலங்களும் உள்ளன. இவற்றை அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவைக்கு எடுத்துச் சென்று எரியூட்டவும் ஏற்பாடு செய்துள்ளோம் என்கின்றனர் சுகாதாரத் துறையினர்.

இவ்வாறு அதிக உடல்கள் தேக்கத்தில் இருப்பதால் சில உடல்கள் தவறுதலாகவோ அல்லது கொரோனா உடல் பார்வைக்குத் திறப்பதில்லை என்ற காரணத்தால் தெரிந்துகொண்டே பழைய உடல்கள் வழங்கப்படுகின்றனவா என உறவுகள் சிலரிடம் ஒரு சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

யாழ்ப்பாணம் செம்பியன் ஒழுங்கையைச் சேர்ந்த முதியவர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு 3 ஆம் இலக்க விடுதியில் சிகிச்சை பெற்ற சமயம் 2 ஆம் திகதி உயிரிழந்தார். இவரது உடல் 4 ஆம் திகதி யாழில் இருந்து வவுனியாவில் தகனத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டபோதும் 5 ஆம் திகதி மீண்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் ஏன் எடுத்து வரப்பட்டது என ஆராய்ந்தபோது உடலம் மாறிவிட்டதாகவும் இது தமது உறவின் உடையது அல்ல எனத் தெரிவித்தே உடலம் மீண்டும் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளது. அவ்வாறானால் பொது மக்களின் சந்தேகமும் நியாயமாகவே உள்ளது. அதேநேரம் கொரோனாவால் உயிரிழந்தவரின் உடலை பொதி செய்து வழங்கினால் அதனை எக் காரணம் கொண்டும் பார்வையிட முடியாது என்கின்றனர். அதனை மீறி உறவுகள் பிரித்துப் பார்வையிட்டனரா என்றாலும் மரணித்த ஐயரின் ஒரு கையில் விரல்கள் இல்லை. ஆனால் போதனா வைத்தியசாலையால் மாறி வழங்கப்பட்டவரது உடலில் அனைத்து விரலும் இருந்துள்ளதால் உடல் மாறிய விடயம் 100 வீதம் உறுதியானதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருந்து வழங்கப்பட்ட உடல் மீண்டும் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட குழப்ப நிலைமையைச் சமாளிக்க சரியான உடலைத் தேடியபோது அந்த உடல் வேறு உறவுகள் எடுத்துச் சென்று தகனமும் செய்துவிட்டனர். அவர்களிடம் அஸ்தியைக்கோரும் நிலைமைக்கு வைத்தியசாலை நிர்வாகம் சென்றது. பின்னர் ஏதோ தீர்விற்கு வந்தது. அதாவது உடலமே மாறும் போது அஸ்தி கிரியை இடம்பெற்றதோ இல்லையோ எவரின் அஸ்தி என எவ்வாறு இனம் காண்பது என்கின்றனர். இதுவும் நியாயமான சந்தேகம்தான்.

இதேநேரம் வடக்கில் அதிகரிக்கும் கொரோனா மரணத்தின் எதிரொலியாக முல்லைத்தீவு வனப் பகுதியில் ஓர் தகன மயானம் அமைக்க மாவட்ட செயலாளர் முயற்சிக்கின்றமை வரவேற்கப்படுகின்றது. அதில் ஒரே தடவையில் 4 உடல்கள் தகனம் செய்யக்கூடிய பெரிய தகன மேடை அமைக்க ஏனைய மாவட்டங்கள் அதற்கான நிதி உதவியை வழங்க முன் வந்தால் மாகாணத்தில் நிலவும் இந்த விடயத்துக்கு முழுமையான தீர்வு எட்ட முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.







இதேநேரம் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது ஓர் தகனமேடை அமைக்க முயற்சிக்கப்படுகின்ற அதே நேரம் மாவட்டத்தில் உயிரிழக்கும் கொரோனா நோயாளர்களை எடுத்துச் செல்வதற்காக கொடையாளரான எஸ்.கே. நாதன் ஓர் வாகனத்தையும் அன்பளிப்புச் செய்துள்ளதனால் கிளிநொச்சி மாவட்டம் ஓரளவு நெருக்கடியில் இருந்து மீளும் நிலைமை ஏற்பட்டாலும் ஏனைய மாவட்டங்களின் நெருக்கடிக்கு தீர்வு கிட்டவில்லை.

# கலப்பு தேர்தல் முறைமை ஈ.பி.டி.பி. கட்சி பரிந்துரை



தொகுதிவாரி முறை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ அமைப்பு ஆகிய இரண்டின் அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு கலப்பு தேர்தல் முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என மகஜன எக்ஸத் பெரமுன தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறையின் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காணவும் தேவையான திருத்தங்களை பரிந்துரைக்கவும் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் குறித்த கட்சி இந்த பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

சபையில் உறுப்பினர்கள் 225 பேரில் 140 பேர் தொகுதிவாரி முறை மூலமும் 70 பேர் மாவட்ட வாரியாக விகிதாசார முறையின் மூலமும் அதே நேரத்தில் தேசியப்பட்டியலுக்கு 15 இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் அமைப்பின் புதிய சீர்திருத்தங்கள் தொகுதிகளின் தெளிவான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும் என மகஜன எக்ஸத் பெரமுனவின் பிரதி செயலாளர் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி கூறினார்.

இதேவேளை, புதிய தேர்தல் முறையில்அனைத்துசமூகங்களின் உரிமைகளையும் உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தை ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

65 சதவிகித உறுப்பினர்கள் தொகுதிவாரி முறையிலிருந்தும், மீதமுள்ள 35 சதவிகிதம் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் முன்மொழிந்துள்ளனர்.

சபைத் தலைவர் மற்றும் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் தேச விமுக்தி ஜனதா கட்சியினரும் தங்களது முன்மொழிவுகளை இதன்போது சமர்ப்பித்திருந்தனர்.

## கிளிநொச்சியில் மின்தகன மயானம் அமைக்க ஏற்பாடு

### பிரதேச தவிசாளர் வேழமாலிகிதன் தகவல்



கிளிநொச்சியில் மின் தகன மயானம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கரைச்சி பிரதேச தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார். கொரோனா மரணங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த மயானத்தை அமைக்க 2 கோடியே 40 லட்சம் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. அந்தத் தொகையில் ஒரு கோடி ரூபாயை கிளிநொச்சியில் உள்ள வர்த்தகர் ஒருவர் வழங்க முன்வந்துள்ளார்.

அதேபோல புலம் பெயர் அமைப்பு ஒன்றும் ஒரு கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இந்த நிலையில், மின் தகன மயானம் அமைக்கும் நடவடிக்கை தொடர்பிலான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன எனக் கரைச்சி பிரதேச தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

## காரைக்காலில் உயிருடன் விடப்படும் நாக பாம்புகள்

### மக்கள் அச்சம்

இணுவில் காரைக்கால் சிவன் கோயிலை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் நாகபாம்பு உள்ளிட்ட விஷஜந்துக்களின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர் என நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சி.கௌசல்யா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் –

‘சிலரின் வீடுகள் மற்றும் விவசாய காணிகளுக்குள் வரும் நாக பாம்பு உள்ளிட்ட விஷஜந்துக்களை உயிருடன் பிடித்து சிவன் கோயிலை அண்மித்த பகுதிகளில் விட்டுச் செல்கின்றனர்.

இந்துக்கள் மத்தியில் நாக வழிபாட்டு முறை உள்ளமையால், நாக பாம்பை அடித்துக்கொல்வதற்கு பலருக்கும் தயக்கம். அதனால் அதனை உயிருடன் பிடித்து வந்து ஆலயச் சூழலில் விட்டுச் செல்கின்றனர்.

புராதன ஆலயமான காரைக்கால் சிவன் கோயிலை சுற்றி பல பாம்பு புற்றுகள் உள்ளன. அந்த புற்றுக்களுக்குள் தற்போது நாக பாம்பு உள்ளிட்ட பல பாம்புகள் குடி கொண்டுள்ளன.

இந்நிலையில் அவை தற்போது, ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள்ளும் விவசாய காணிகளுக்குள்ளும் படையெடுக்கின்றன. அதனால் அப்பகுதி மக்கள் பாம்புகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து, வனவிலங்கு பாதுகாப்பு துறையின் உதவியை பெற்றுள்ளோம்.

அதன் மூலம் ஆலய சூழலில் நாக பாம்புகள் உள்ளிட்ட பாம்புகள், விஷஜந்துக்களை கண்ணுற்றால் சமூகப் பொறுப்புடன் 0779507269 எனும் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேவேளை ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் பாம்புகள் உள்ளிட்ட விஷஜந்துக்களை கொண்டு வந்து உயிருடன் விடுவதை தடை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறேன்’ எனத் தெரிவித்தார்.

## அலட்சியமாகச் செயற்படாதீர்கள்!



மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்து

தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டாலும் அலட்சியமாக செயற்படாதீர்கள் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய வட. மாகாண கொரோனா நிலைமை தொடர்பாக கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

வடக்கு மாகாணத்தில் தற்போது கொரோனாத் தொற்றுக்கு எதிராகத் தடுப்பூசி வழங்கும் பணிகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன. அந்த அடிப்படையிலே 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 30 வயதுக்கு மேற்பட்ட 6 லட்சத்து 57 ஆயிரத்து 547 பேர் உள்ளனர். அவர்களில் முதலாவது டோஸ் தடுப்பூசி 5 லட்சத்து 58 ஆயிரத்து 131 பேருக்கு இன்று வரை வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல இன்று வரை இரண்டாவது கட்ட தடுப்பூசி இரண்டு லட்சத்து 94 ஆயிரத்து அறுபத்தி ஒன்பது பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் இரண்டாவது கட்டத் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடம்பெற்று வருகின்றன.

திங்கள் முதல் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் இரண்டாவது கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இரண்டாவது தடுப்பூசி வழங்கும் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அனைவரும் இந்தத் தடுப்பூசியைப் பெறுகின்றமை அவசியமாகும். இன்றுவரை தடுப்பூசியைப் பெறாதவர்கள் அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுங்கள். தடுப்பூசி பெற்றுக்கொண்ட பின்னர் சிலர் அலட்சியமாக செயற்படுகின்றார்கள் அதாவது சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாது செயற்படுகின்றார்கள். தடுப்பூசி பெற்றுக்கொண்டாலும் தொற்று ஏற்படுவதற்கு வாய்ப்பு காணப்படுகின்றது.

எனவே தடுப்பூசிபெற்றுக்கொண்டாலும் தொடர்ந்து சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைக் கட்டாயமாக இறுக்கமாகப் பின்பற்ற வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. அத்தோடு இயலுமானவரை பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். கட்டாயமாக முகக்கவசம் அணிதல் வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கில் 6 நாள்களில் 75 கொவிட் மரணங்கள்

வடக்கு மாகாணத்தில் செப்டெம்பர் மாதத்தின் முதல் 6 நாள்களில் மாத்திரம் 75 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் வவுனியா மாவட்டத்தில் 29 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 27 பேரும் உயிரிழந்துள்ளனர் என சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, வடக்கு மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமை 11 பேர் கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 5 பேரும் வவுனியா மாவட்டத்தில் 3 பேரும் முல்லைத்தீவில் 2 பேரும் கிளிநொச்சியில் ஒருவரும் என 11 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் 2020 மார்ச் தொடக்கம் கடந்த திங்கட்கிழமை வரை வடக்கு மாகாணத்தில் 488 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

## வடக்குக் கிழக்கில் தகனஞ்செய்வதில் பாரிய சிக்கல் என சுமந்திரன் முறையீடு

### நிதி அமைச்சரிடம் நேரில் தெரிவிப்பு

வடக்கு கிழக்கில் சடலங்களை தகனம் செய்வதில் பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டுள்ள நிலையில் அதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார். நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் நேரடியாக குறித்த முறைப்பாட்டை அவர் முன்வைத்திருந்தார்.

கொரோனாத் தொற்றால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் குறிப்பிட்ட நேரத்துக்குள் உடல்களை தகனம் செய்வதற்கு போதியளவு வளம் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை யாழ்ப்பாணம் சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள தமிழ் பேசத் தெரியாத சிறைச்சாலை அதிகாரிகள் விவகாரம் தொடர்பாகவும் நிதியமைச்சர் ஆராய வேண்டும் என்றும் சுமந்திரன் கேட்டுக்கொண்டார்.





இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 124

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**343. இதனை எதிர்பார்த்தீர்களா?**

எதிர்பார்க்கவில்லை. பெரிதும் மனவேதனையாகவும் ஏமாற்றமுகமாக இருந்தது.

பிரபாகரன் தனது ஆயுதப் போராட்டத்துக்கு தனது இளவயது முதலே மூன்று பேரை உதாரண புருஷர்களாகக் கொண்டிருந்தார். ஒருவர் – வாஞ்சிநாதன் (இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் கவர்னர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றவர்),அடுத்தவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் (காந்தியுடன் காங்கிரஸிலிருந்து போராடினாலும், பின் வெளியேறி இந்திய தேசிய இராணுவத்தை



உருவாக்கி, அதனைப் புலம்பெயர் தேசங்களிலும் பரப்பி, உதவிகள் பெற்று இந்திய சுதந்திரக் கொடியை ஜப்பானின் ஆதரவுடன் மாலைதீவுகளில் பறக்க விட்டவர்),மூன்றாவது ஜேர்மனியின் சர்வதிகாரியும் நாஸிகளின் தலைவனுமான ஹிட்லர். அவனது இராணுவக் கட்டமைப்புக்களில் அதீத நம்பிக்கை கொண்டு அவர்களின் கட்டுப்பாடுகளைத் தனது போராளிகளின் உருவாக்கத்தில் பயன்படுத்தியவர். ஹிட்லரின் பாணி சல்யூட் கூடச் செய்யவேண்டும் என கடைப்பிடித்தவர். அதை சம்பந்தர் கூட பின்னாளில் செய்தார். கடைசியில் ஜேர்மனியே சரணடைய ஹிட்லர் தானே தற்கொலை செய்து கொண்டான். இருவருமே தாங்கள் எந்த மக்களை முன்னெடுத்தார்களோ அவர்களின் நிலைகளை தாங்கள் கடைசிவரையும் போராடுவோம் என்ற வைராக்கியத்தால் கணக்கில் கொள்ளவேயில்லை.

**344. இப்பொழுதாவது எங்கள் தலைவர்கள் மக்களைக் கணக்கெடுக்கின்றார்களா அல்லது அவர்களது அரசியல்தானா?**

நீங்கள் எதனை உணர்த்துகின்றீர்கள் என்பதை புரிந்து கொள்கிறேன். மார்ச் 2021 இல் நடந்த மனித உரிமை மன்றுக் கூட்டத்திற்கு தமிழர் விவகாரத்தை அங்கிருந்து வெளியே எடுத்து, ஐ.நா. காரியதரிசிக்கு பாரப்படுத்த வேண்டுமென்று எல்லா கட்சித் தலைவர்களும் கையெழுத்திட்டுக் கோரினார்கன். அதிலிருந்த அரசியலேயும் அது தரக் கூடிய தாக்கத்தைப் பற்றியும் முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

யுத்தம் முடிந்து 12 ஆண்டுகளாகின்றன. அன்றிலிருந்து வருடம் இருமுறை இந்த ஜெனிவாக் கூட்டங்களை தமிழ்மக்களின் பிரதிநிதிகள் மட்டுமல்லர், ஸ்ரீலங்கா அரசும், சிங்கள மக்களின் பிரதிநிதிகளும், கதிர்காம கந்தன் திருவிழா போல பாவித்துக் கூடுவார்கள். மாறி மாறி தீர்மானங்கள் நடந்தன. ஆனால் இரு பகுதியாரும் சாதித்தவை ஒன்றுமில்லை. காலம் உருண்டோடியதுதான் மிச்சம்.

ஐ.நா. காரியதரிசி பான் கீ மூன் அமைத்த தருஸ்மன் குழு சமர்ப்பித்த அறிக்கையில், இருபக்கத்தாலும் போர்க் குற்றங்களும் மனிதாபிமானத்துக்கு எதிரான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன, அவை விசாரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்ததால் மனித உரிமைகள் மன்று அதைப் பாரமெடுத்தது. தருஸ்மனின் அந்த அறிக்கை வெளியிடப்பட்டு, பகிரங்கப்படுத்தப்பட்டே 10 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அந்த அறிக்கைதான் மனித உரிமை மன்றின் விசாரணைகளுக்கே மூலம். இப்பொழுது அந்த அறிக்கையில் விடுதலைப் புலிகளும் குற்றங்கள் செய்தார்கள் என்பதை கணக்கெடுக்கக் கூடாது என்று கூட்டமைப்புக்குள் போர்கொடி தூக்கியவர்களின் அரசியல் குழப்பமானது நோக்கப்பட வேண்டும்.

தருஸ்மனின் அறிக்கை வெளிவந்த உடனேயே ஸ்ரீலங்கா நாட்டின் அரசாக, தாங்கள் எந்தக் குற்றங்களும் இழைக்கவில்லை என்று கூறி அந்த அறிக்கையை நிராகரித்தது. ஆனால் சர்வதேச ரீதியில், விடுதலைப் புலிகளின் அமைப்புகளில் ஏற்பட்டுக் கொண்டிருந்த மாற்றங்களினால் விடுதலைப் புலிகள் தங்களது அமைப்பு ரீதியாக அதை நிராகரித்தனர் என எனக்கு நினைவில்லை.

சென்ற மார்ச் 2021 நிகழ்வுக்குப் பிறகு, இழைக்கப்பட்ட குற்றங்களை ஆராய ஐ.நாவினால் அலுவலகம் நிறுவப்பட்டு பணமுதலீடும் செய்யப்பட்ட பின், விடுதலைப் புலிகள் குறித்தும் ஆராயப்படலாம் என்ற ஆதங்கங்களில் தருஸ்மன் அறிக்கையைக் கணக்கெடுக்கக் கூடாது என்ற எண்ணம் இப்பொழுது எழுகிறதோ தெரியவில்லை. ஆனால் அத்தகைய காவடிகளைத் தூக்குவோரைக் காணும்போது அவர்களின் அரசியலின் மூலங்கள் எங்கிருந்து வருகின்றன என்பதும் புதிராகவேயுள்ளது.

கடந்த 12 வருடங்களாக தமிழ்மக்கள் மனித உரிமை மன்றில் காலத்துக்குக் காலம் பல விதைகளை விதைத்திருக்கிறோம். கீரை விதையும் ஆலம் விதையும் அளவிலும் தோற்றத்திலும் ஒரே அளவுதான். விளைவுதான் வித்தியாசம்.

**345. பிரபாகரனின் முடிவுகளைப் பற்றி அபிப்பிராயம் என்ன?**

எனது அபிப்பிராயம் என்பதை விட, மக்கள் நடந்



தவைகளிலிருந்து, பின் போர் வலயங்களிலிருந்து முகாம் வாழ்வு, மீள்குடியேற்றங்களிலானஅனுபவங்கள், தொடரும் அடக்குமுறைகள், காணி பறிமுதல், பௌத்தத்தின் எடுப்பு, விதைப்பு என்பவற்றில் இருந்து தாங்களே கணித்துக் கொள்வது நன்று.

முன்னர் ஒரு பகுதியில் தெடர்ந்த ஆயுதப் போராட்டங்களால் நாம் எதனை மேலதிகமாகப் பெற்றோம் என்ற கருத்தை வைத்திருந்தேன். அதைப் பற்றி சில நண்பர்கள் என்னுடன் பேசி தொடர்ந்த ஆயுதப் போராட்டம் இன்றும் எங்களை சர்வதேச நீரோட்டத்தில் விடுதலை வேண்டுபவர்களாக வைத்திருக்கிறது, நீதி மறுக்கப்பட்டவர்களாக ஏற்றுக்கொண்டுள்ளது,

தமிழ்நாட்டைப் பாருங்கள், அங்கே இப்பொழுது பிரபாகரன் உணர்வை அடிப்படையாகக் கொண்டு சீமான் மேற்கொள்ளும் எழுச்சியை, இவை எல்லாம் வெகுவிரைவில் எமது இலட்சியத்தை வென்று தரும் என்ற நம்பிக்கை உண்டு என்று வாதித்தனர்.

அத்தோடு வளரும் இந்து சமுத்திரத்தின் சூழல் தமிழ் மக்களுக்கு வாய்ப்பாக வரும் என்ற எண்ணம் ஆழமாக அவர்களுக்கு இருந்தது.

ஒரு யதார்த்த நிலையிலிருந்து பார்த்தால் சீனாவோடு அமெரிக்கா முரண்படுவதும், இந்தியாவும் அதில் ஆதங்கம் காட்டி சீனாவில் ஸ்ரீலங்கா ஆழமாகக் கால் பதிப்பதை விரும்பாததும் வியாபாரங்கள், வர்த்தகங்கள் சம்பந்தப்பட்டவை. அவை தமிழ் மக்களின் விடுதலையை ஒட்டியவையல்ல. அமெரிக்கா தன் அனுபவங்களால் இந்தியக் கடல் பரப்பிலோ அல்லது ஸ்ரீலங்காவிலோ, இந்தியா தற்சமயத்திலிருக்கும் வணிக நட்புறவிலும் கூட தங்களை மீறிய ஒரு ஆதிக்கத்தை அனுமதிக்கப் போவதில்லை. அமெரிக்கா, சீனா,இந்தியா, ஏன் ரஷ்யா கூட தங்களது வணிக மேம்பாட்டிற்காக விட்டுக் கொடுக்கும் மனப்போக்கில் இருப்பார்களேயொழிய, அவை எவருமே இந்தப் பிராந்திய நீதிக்கு, உரிமைக்கு, மனிதாபிமானத்துக்காக நின்று, தங்கள் வணிகத்தைக் கோட்டை விடத் தயாராகவில்லை. அதனை தமிழ் மக்கள் மிகத் தெளிவாக உணர்ந்துகொண்டு காரியமாற்ற வேண்டும்.

பிரபாகரன் முன்னெடுத்த போராட்டம் ஓர் இன ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டம். அவருக்கு முன்னரே இதற்கான போராட்டங்களைத் தமிழ் மக்கள் எடுத்திருந்தார்கள். அதில் நியாயம் இருந்தது. இன உணர்வு இருந்தது. அங்கே சிங்களவருக்கு எதிரான இன மேலாண்மை இருக்கவில்லை. தமிழ் மக்கள் சரிசமமாக நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைதான் இருந்தது. அது வன்முறைகளால் அடக்கப்பட எதிர்ப்பும் வன்முறையானது. ஆனால் அவற்றுக்கும் சில நியாயங்கள் வைக்கப்பட்டன. ஒரு விடுதலைப் பாதையாகவும் அடக்குமுறைக்கு எதிரான நியாயமான வன்முறை எனவும் அது பார்க்கப்பட்டது.

அந்த எழுச்சி, பின்னாளில் மாநில அரசுகளின் அரசியலில் சிக்கி தத்தளித்து அல்லல்பட்டது.

இன்று பிரபாகரனின் மறைவுக்குப் பிறகு, அது தமிழினத்தின் ஒட்டுமொத்த எழுச்சியாக மேலாண்மையாக சீமான் போன்றவர்கள் எடுக்கப்பட்டு, திராவிட சிந்தனையாளர்களோ முரண்பட்டு, ஈழத் தமிழ் மக்களையும் அந்த ஆற்றில் கொண்டு போய்ச் சேர்க்கிறது. அந்த ஆற்று வெள்ளத்தில் ஈழத் தமிழரும் திக்குத்திசை இல்லாமல் பயணிக்க போகின்றோமா, அது பயன் தருமா, அது அவர்களை கரை சேர்க்குமா அல்லது வெள்ளத்தோடு அடிபட்டுப் போகச் செய்யுமா என்பவை எடைபோட்டு பார்க்கப்பட வேண்டியவை.

இந்திய ஒப்பந்தத்திலிருந்த அதிகாரப் பரவலுக்கு சிங்கள – பௌத்த வாதிகள் காட்டிய சுழியோடலை நாம் இந்தியாவுடன் சேர்ந்து நிவர்த்தி செய்து இருக்கலாமா அல்லது பிந்தைய போர்களால் நோர்வேயின் சமூகத்தில் பாலசிங்கம் ஏற்றுக்கொண்ட கூட்டாட்சி முறையைப் பிரபாகரன் முன்னெடுத்து இருக்கலாமா, அவற்றை விட்டு மேலும் தொடர்ந்த போரினால் நாம் பெற்றது என்ன என்பவை பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அதைத்தான் 'சற்றர்டே ரிவியு', 'ஹொட்ஸ் பிறிங்' ஆசிரியர் சிவநாயகம் முன்னெடுக்க அவரது பத்திரிகை லண்டனில் அடித்து நொறுக்கப்பட்டு, நிறுத்தப்பட்டது. ஆனால் அவர்கள் அல்லது அவரின் விடுதலைப் பாதை அல்ல. அவரது பெயரில் நடந்தவை, நடப்பவை.

(வளரும்...)



காலைக்கதிர்
Kalaikkathir



# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

## அங்கம் -69

ந.வித்தியாதரன்

நீதித்துறை, நீதிமன்றச் செய்திகளைக் கையாள்வதில் மிகுந்த அவதானமும் பொறுப்பும் அவசியம். இப்போதெல்லாம் செய்தியாளர்கள் அவை பற்றி எல்லாம் சிந்திப்பவர்களாகவோ கவனிப்பவர்களோ இல்லை என்றே தோன்றுகின்றது. செய்திகள் பெரும்பாலும் அந்தச் சீத்துவத்தில்தான் பிரசுரமாகின்றன.

'ஆலயத்தில் துணிகரக் கொள்ளை' என்று தலைப்பு இருக்கும். செய்தியும் அப்படியே வரையப்பட்டிருக்கும். செய்தியின் முடிவில் வாசித்தால் விவரம் வேறு விதமாக இருக்கும். காலையில் அர்ச்சகர் கோயிலுக்கு வந்து திறந்து பார்த்தபோதுதான் உள்ளே பெறுமதி வாய்ந்த ஆபரணங்கள், சுவாமி சிலைகள் காணாமல் போயிருந்தமை தெரிய வந்தது என்று செய்தி முடியும். அங்கு நடந்தது திருட்டு. ஆனால் தலைப்பும் செய்தியும் கொள்ளை என்று எழுதப்பட்டிருக்கும். கொள்ளை வேறு; திருட்டு வேறு. இரண்டுக்கும் குற்றவியல் தண்டனை சட்டக் கோவையில் வெவ்வேறு பிரிவுகளில் தான் வழக்குகள் தொடர முடியும். கொள்ளையைத் திருட்டுக் குற்றத்தின் கீழேயே, திருட்டை கொள்ளைக் குற்றத்தின் கீழேயோ தண்டிக்க முடியாது.

செய்திகள் எழுதும் போது திருட்டா, கொள்ளையா என்று தீர்மானிக்க முடியாத சமயங்களில் சூறை, அபேஸ் என்ற சொற்களை பயன்படுத்த முடியும்.

உங்கள் பொக்கற்றில் இருக்கும் பெறுமதி மிக்க பொருளை உங்களுக்கு தெரியாமல் - நீங்கள் அசந்து இருக்கும் நேரத்தில் - நான் சுருட்டுவது திருட்டு. நீங்கள் கொட்டக் கொட்ட விழித்துப் பார்த்திருக்க, நான் முக பாவனையாலோ அல்லது வேறு வகையிலோ அச்சுறுத்தி உங்களை பயத்தில் அடக்கிவிட்டு, உங்கள் பொக்கற்றில் இருக்கும் பொருளை துணிச்சலாக அபகரித்துச் செல்வது கொள்ளை.

கொள்ளை, திருட்டு வேறுபாடு தெரியாமலேயே இப்போது செய்திகள் எழுதப்படுகின்றன; பிரசுரிக்கப்படுகின்றன.



அது போன்றுதான் நீதிமன்றங்கள், நீதி பரிபாலன அதிகாரிகள் பெயர்கள் சுட்டுவதிலும் பெரும் தவறு இழைக்கப்படுவது அவதானிக்கப்படுகின்றது.

நீதித்துறையை பரிபாலிக்கும் அதிகாரிகள் இலங்கையைப் பொறுத்தவரை மூன்று வகையினர். நீதிவான் (மஜிஸ்திரேட்), நீதிபதி (ஜட்ஜ்), நீதியரசர் (ஜஸ்டிஸ்). தவிரவும் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர், பிரதம நீதியரசர் போன்ற பதவி நிலைகளும் நம்நாட்டில் உண்டு.

முதலில் நீதிவான். இதை நம் மத்தியில் சிலர் 'நீதவான்' என்றும் எழுதுவதுண்டு. நீதிவான் என்பது தான் சரி. மஜிஸ்திரேட் நீதிமன்றங்கள், ஆரம்ப நீதிமன்றங்கள், குடும்ப நீதிமன்றங்கள் போன்ற முதனிலை



நீதிமன்றங்களின் நடுவர் இவர்தான்.

அதேபோல மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களின் நடுவர்கள் நீதிபதிகள். மேல்முறையீட்டு நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றம் போன்றவற்றின் நடுவர்களை நீதியரசர் என்போம். தவிரவும் 'ட்ரயல் அட் பார்', விசேட தேர்தல் நீதிமன்றம் என்றெல்லாம் நீதிமன்றங்கள் உண்டு. ஒவ்வொன்றில் பணிபுரிபவர்களுக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. மாவட்ட நீதிமன்றத்தில் பணிபுரிபவரை நீதியரசர் என்று கூற முடியாது. அதேபோல மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பணிபுரிபவரை நீதிபதி என்று அழைக்க முடியாது. (இந்திய நீதிமன்ற நிலைமைகள் வேறு. நாங்கள் இலங்கையில் High Court என்பதை மேல் நீதிமன்றம் என்கிறோம். இந்தியாவில் - தமிழகத்தில் - அதனை உயர்நீதிமன்றம் என்கிறார்கள். நாங்கள் Supreme Court ஐ உயர் நீதிமன்றம் என்கின்றோம். அவர்கள் உச்ச நீதிமன்றம் என்கின்றார்கள். அது வேறு விடயம்.)

ஆனால், இலங்கைத் தமிழ் ஊடகங்கள், குறிப்பாக நமது யாழ்ப்பாண ஊடகங்கள் இந்த நீதிமன்ற சொல்லாடல்களைக் கவனிக்காமலேயே செய்திகளை வெளியிடுகின்றன. இது வேதனைக்குரியது மட்டுமல்ல, ஒரு நாளைக்கு நீதிமன்றங்கள் அழைப்பாணை விடுத்து விளக்கம் கேட்கும் நிலைக்குக் கூட நம்மை இழுத்துச் செல்லலாம்.

சரியான பயிற்சி, பரிச்சயம் இன்றி நீதிமன்ற செய்தியாளர்களை பணிக்கு அனுப்புவதால் வரும் குழப்பங்கள் இவை.

சிவநாயகம் ஐயா இதில் விசேட கவனம் எடுத்தார். அவரின் கீழ் செயற்பட்ட அணி - துணை ஆசிரியர், செய்தி ஆசிரியர், உதவி ஆசிரியர்கள் எல்லோரும் - இதில் அவதானமாக இருந்தார்கள். அதனால் அங்கு நீதிமன்ற செய்தியாளராகப் பயிற்சி நிலையில் இணைந்த நான், வாண்மை மிக்க ஒரு குழுவினால் ஆரம்பத்திலேயே புடம் போடப்பட்டேன் என்பதே உண்மை. நீதித்துறை சொல்லாடல்களில் கூட மிகுந்த அவதானம் கொண்ட அத்தகைய ஓர் ஆசிரிய பீடத்தில் பயிற்சி பெற எனக்குக் கிடைத்த வாய்ப்பு பெரும்பேறு. பாவம் இப்போது நமது ஊடகத்துறைக்கு இணைய வருவோருக்கு பயிற்சிகளை வழங்குவதற்குத் தேர்ச்சி பெற்ற ஆசிரிய பீடங்களும் இல்லை, தேர்ச்சி பெற்றவர்களும் இல்லை. அவை எல்லாம் சிவநாயகம் ஐயா காலத்துடன் மலையேறி விட்ட விடயங்கள்.

நீதித்துறை செய்தி சேகரிப்பு தொடர்பில் சில அடிப்படை விடயங்களை சொன்னேன். இனி எங்கள் விடயத்துக்கு வருவோம்.

இலங்கையில் நீதித்துறை தொடர்பாக பயன்படுத்தப்பட்ட ஒரு சொல்லாடல் குறித்து இந்திய நீதியரசர் எஸ்.மோகன் வியப்பு தெரிவித்தார் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

ஒருவர் காணாமல் போனால் அல்லது தவறான முறையில் எங்கேனும் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவரை அல்லது அவரது உடலை நீதிமன்றத்துக்குக் கொண்டு வரும்படி கோரி தாக்கல் செய்யப்படும் மனுவை ஆங்கிலத்தில் Habeas Corpus Writ என்பார்கள். முறையற்ற தடுத்து வைப்புக்கு எதிரான இந்த மனுவின் மூலப் பெயர் லத்தீன் மொழியில் இருந்து வந்தது. லத்தீனில் Habeas Corpus என்றால் 'உடலைக் காட்டு!' என்பது அர்த்தம். Corpus என்றால் உடல் என்பது எனக்கு தெரியும். ஒருவரை அல்லது அவரது உடலை நீதிமன்றுக்கு கொண்டு வரக் கேட்கும் மனு தான் அது. ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் அதை 'ஹேபியர்ஸ் கோபஸ் மனு' என்று லத்தீன் சொல்லிலேயே பயன்படுத்தினார்.

ஆளை அல்லது அவரது உடலை நீதிமன்றுக்கு கொண்டுவர ஆணையிடக் கோரும் மனு தானே அது? தமிழில் அதற்கு 'ஆள்கொணர்வு மனு' என்று நாமம் இட்டனர் இலங்கையர்.

இங்குள்ள பத்திரிகைகளில் - தினபதியில் - அதனைப் பார்த்தது தான் ஆச்சரியப்பட்டுப் போனார் என்றார் நீதியரசர் மோகன்.

*"ஆஹா.... என்ன அருமையான தமிழாக்கம்! புதிய ஆங்கிலச் சொல்லாடல் இல்லாமையால் லத்தீன் மொழியில் என்ன சொல்லாடலில் அது பயன்படுத்தப்பட்டதோ அந்த லத்தீன் வார்த்தைகளிலேயே ஆங்கிலேய சட்டவாளர்கள் அதனை உள்வாங்கிக் கொண்டனர். ஆனால் அதே லத்தீன் மொழியில் குறிப்பிடும் சொற்களை தமிழில் புனைந்து, மிக அழகாக அதனை 'ஆள்கொணர்வு மனு' என்ற சொற்களுக்குள் அடக்கி விட்டார்கள் இலங்கைத் தமிழர்கள். அச்சொல்லை இப்போது தமிழகமும் தத்தெடுத்துக் கொண்டு விட்டது"* என்றார் அவர். இது இருபது, முப்பது வருடங்களுக்கு முன்னர் நடந்த சங்கதி.

இதே போன்ற சாதாரண சட்டச் சொற்களுக்கு அற்புதமான தமிழை நமது இலங்கைத் தமிழ் சட்டவாளர்கள் ஊடகவியலாளர்களும் வெளிப்படுத்தி நிற்கின்றார்கள். தமிழகத்தில் இப்போது ஓரளவுக்கு சட்டச் சொற்களைத் தூய தமிழில் மாற்றி வருகின்றார்கள். அங்கு ஆங்கிலத்தில் 'பெஞ்ச்' என்ற சொல்லை அப்படியே தமிழில் பயன்படுத்துவார்கள். ஆனால் நாம் 'ஆயம்' என்று சரியாகத் தமிழில் பிரயோகிப்போம்.

ஆனால் 'சொலிஸிட்டர் ஜெனரல்' என்பதை 'மன்றாடியார் தலைமை அதிபதி' என்று மொழிபெயர்த்து செய்தி வெளியிடுவதில் எனக்கு ஏனோ உடன்பாடில்லை.

இப்படித் தமிழ் சொற்களை வலிந்து மொழிபெயர்த்துத் திணிக்காமல், சட்டச் சொற்களை உரிய முறையில் மக்களுக்கு விளங்கக்கூடிய எளிய சொல்லாடல்களில் கையாளும் ஒரு முறைமையை நாம் ஏற்படுத்த வேண்டும்.

சட்டத் துறையினரும், ஊடகத் துறையினரும் கற்றறிந்தவர்கள் மட்டத்தில் கூடி ஆராய்ந்து, ஒரு வழிகாட்டி நூலைத் தயாரிப்பது கூட காலத்தின் கட்டாயமாகும். சிவநாயகம் ஐயா போன்றோர் இருந்திருந்தால் இந்த முயற்சிக்குப் பேருதவியாக இருந்திருக்கும்.

பின்னாளில் நாட்டின் சட்டமா அதிபராக இருந்த கே.ஸி.கமலசபேசன் நான் சட்டக் கல்லூரியில் இணைந்த காலத்தில் வெறும் அரச சட்டத்தரணிதான். கொழும்பில் என் பாதுகாவலர் (Guardian) பொறுப்பை அவரிடமே ஒப்புவித்திருந்தார் என் தந்தை. அவர் எனக்குச் சட்டக் கல்லூரியில் முதலாம் ஆண்டில் குற்றவியல் சட்ட விரிவுரையாளர். அக்காலத்தில் ஆங்கிலத்தில் கற்ற அவருக்கு அந்த விரிவுரைகளைத் தமிழில் விளங்கப்படுத்த வேண்டிய கட்டாயம் நேர்ந்தது. அந்தச் சமயத்தில் சட்ட சொற்களுக்குத் தமிழ் தேடும் அவரின் முயற்சிக்கு நீதிமன்றச் செய்தியாளனாகவும் இருந்த நான் உதவினேன்.

Negligence என்ற ஆங்கிலச் சொல்லுடன் அவர் வருவார். அதற்கு 'அலட்சியம்', 'கவலையீனம்', 'கவனயீனம்' என்ற பதிலோடு நான் போவேன். விவாதம் நடக்கும். முடிவு எடுப்போம்.

சட்டத்தில் Motive வேறு, Intention வேறு. எதற்கு 'நோக்கு' அல்லது 'நோக்கம்' என்பது, எதற்கு 'கருத்து' என்பது என்ற சர்ச்சை நமக்குள் நடக்கும்.

இவை எல்லாவற்றையும் கவனிக்காமலேயே, திருட்டுக்குக் கூட கொள்ளை என்று குறிப்பிடக்கூடிய வகையிலேயே நமது தமிழ் ஊடகத்துறை இன்று சென்று கொண்டிருக்கின்றது. அதுதான் வேதனைக்குரிய விடயம்.

# இராணுவமயமாக்கலை நடைமுறைப்படுத்த அரசு பல நாடகங்களை அரங்கேற்றுகின்றது!



ஹக்கீம் காட்டம்

நாட்டில் இராணுவமயமாக்கலை நடைமுறைப்படுத்தவே அரசாங்கம் அவசரகால சட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்காக பல நாடகங்களை அரசு அரங்கேற்றுகின்றது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவால் அமுலுக்குக்கொண்டுவரப்பட்ட அவசரகால சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

அத்தியாவசிய சேவைகளைப் பாதுகாப்பதற்காகப் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 3 அல்லது 17 ஆம் பிரிவை கொண்டுவந்திருக்கலாம்.

அரசு பல நாடகங்களை நடத்துகின்றது. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு காட்சிகள் அரங்கேற்றப்படுகின்றன. நுகர்வோர பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸார், இராணுவத்தினர் அத்தியாவசியப் பொருள்கள் களஞ்சியப்படுத்தியிருக்கும் களஞ்சியசாலைகளை சுற்றிவளைக்கும் காட்சிகளை ஒவ்வொருநாளும் காட்சிப்படுத்தி வருகின்றனர்.

இதன் மூலம் மக்களை அரசு ஏமாற்றுகின்றது. வலுக்கட்டாயமாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்நிய செலாவணி பிரச்சினையால் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட மறுதினமே சர்வதேச ஊடகங்கள் இலங்கையில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக செய்தி வெளியிட்டன.

இலங்கை லெபனானின் நிலைக்கு செல்வதாக கூறப்படுகின்றது. லெபனானில் 70 வீதம் வறுமை. அந்த நிலைக்கே இலங்கையும் செல்கின்றது. - என்றார்.

## கனடாவைத் தொடர்ந்து இத்தாலியும் சுமங்கல டயஸை தூதராக ஏற்கமறுப்பு?

இத்தாலிக்கான இலங்கைத் தூதுவராக முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் இத்தாலி அதற்கான எந்தவிதப் பதிலையும் கடந்த ஐந்து மாதங்களாக வழங்கவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கனடாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக சுமங்கல டயஸ் நியமிக்கப்பட்ட போதிலும் போர்க் குற்றச்சாட்டு உள்ளமையால் கனேடிய அரசாங்கம் அவரை ஏற்க மறுத்துவிட்டது.

இதனையடுத்து, கடந்த ஏப்ரல் மாதம் இத்தாலிக்கான தூதுவராக சுமங்கல டயஸை நியமிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்திருந்தது.

எனினும் இத்தாலிய அரசாங்கம் இந்த நியமனத்தை ஏற்றுக்கொண்டதாகவோ அல்லது சுமங்கல டயஸ் இத்தாலிக்கான தூதராக பொறுப்பேற்றதாகவோ தெரிவிக்கப்படவில்லை. என அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. 1984 முதல் நாட்டுக்குச் சேவை செய்த எயர்மார்ஷல் சுமங்கல டயஸ், 2020 நவம்பர் 2 ஆம் திகதி விமானப்படையின் 17 ஆவது தளபதியாக ஓய்வு பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அஜித் நிவார்ட் கப்ரால் இராஜினாமா செய்கிறாரா?



நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தனது பதவியை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்திய வங்கி ஆளுநர் பதவியை ஏற்பதற்காகவே தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் நிவார்ட் கப்ரால் இவ்வாறு இராஜினாமா செய்வதற்குத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தற்போது மத்திய வங்கி ஆளுநராக பணியாற்றும் டபிள்யூ.டி. லக்ஷ்மன் சர்வதேச நாணய நிதியத்தில் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

2008 ஆம் ஆண்டு மத்திய வங்கி ஆளுநராக இருந்த போது அஜித் நிவார்ட் கப்ரால், உள்நாட்டு யுத்தம் மற்றும் உலகளவில் ஏற்பட்ட பொருளாதார சவாலை எதிர்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின் பிரபல தலைவர் இரு மாதங்களில் உயிரிழப்பார்!

### பரபரப்பு தகவலை வெளியிட்ட பிக்குணி

இலங்கையில் இன்னும் இரண்டு மாதங்களில் நாட்டை நேசித்த பிரபல தலைவர் ஒருவர் உயிரிழப்பார் என பல்லேகலை கோதமி விகாரையின் விகாராதிபதி கோத்தமி பிக்குணி ஆரூடம் கூறியுள்ளார்.

சிங்கள இணையத்தள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

எனக்கு பேய் புகுந்துள்ளது, சாமி வந்து விட்டதென எல்லாம் பலர் கூறுகின்றார்கள். அப்படியில்லை எனக்குள் தோன்றும் விடயத்தைத் தான் நான் கூறுகின்றேன். நான் கூறுவதும் அவ்வாறே நடக்கும்.

அதற்கமைய இலங்கையில் பிரபலமான தலைவர் இன்னும் 2 மாதங்களுக்குள் உயிரிழப்பார். நான் பொறுப்புடன் தான் இதனைக் கூறுகிறேன். அவர் மக்களால் அதிகமாக நேசிக்கப்பட்ட ஒருவராவார். பல்வேறு விடயங்களைச் செய்த ஒருவராவார். யாராலும் எதிர்பார்க்க முடியாத ஒருவரே இறக்கவுள்ளார். அவர் சர்வதேச அளவில் புகழ் பெற்ற ஒருவருமாவார்.

அதனை நான் தற்போதே பொறுப்புடன் கூறிக் கொள்ள எதிர்பார்க்கின்றேன்.

எனினும் அவற்றை நம்மால் தடுக்க முடியாது. அத்துடன் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் யாராலும் எதிர்பார்க்க முடியாத இரண்டு பிரபலங்கள் படுத்த படுக்கையாகும் கொடூர நோய் ஒன்றால் பாதிக்கப்படுவார்கள். அவர்களில் ஒருவர் பேச்சாற்றல் கொண்ட பிரபல பிரபுக்களில் ஒருவராவார். அவர்கள் கொடூர நோய்களால் பாதிக்கப்பட்டு மிக மோசமான நிலைக்குள்ளாகுவார்கள்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் யாரும் எதிர்பாராத பல அதிர்ச்சிச் சம்பவங்கள் இடம்பெறும். அத்துடன் பலரின் கனவுகள் கலைந்து போகும். 2050ஆம் ஆண்டிலும் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியும். எனினும் அவற்றை எல்லாம் நான் கூறப்போவதில்லை. நான் கூறுகின்றமை தீர்க்க தரிசனம் அல்ல. அவை எனக்கு கிடைத்த உலகளாவிய ஞானம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொவிட் ஒழிப்புக் குழுவிலிருந்து வைத்தியர் ஒருவர் விலகினார்!

கொவிட் ஒழிப்பு தொழில்நுட்ப குழுவிலிருந்து நிபுணத்துவ மருத்துவர் ஒருவர் விலகியுள்ளார்.

தேசிய கொவிட் ஒழிப்பு தொழில்நுட்ப குழுவிலிருந்து அதில் அங்கம் வகித்த நிபுணத்துவ மருத்துவர் ஒருவர் விலகியுள்ளார். தேசிய தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் நிபுணத்துவ மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரமவே இவ்வாறு கொவிட் ஒழிப்பு தொழில்நுட்ப குழுவிலிருந்து விலகிக்கொண்டுள்ளார்.

சுகாதார சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு மின்னஞ்சல் மூலம் தமது இராஜினாமா பற்றி வைத்தியர் ஆனந்த விஜே விக்ரம அறிவித்துள்ளார்.

இந்தக் குழுவின் ஒரு சில தீர்மானங்களுடன் தமக்கு உடன்பாடு கிடையாது எனவும் தொடர்ந்தும் குழுவில் அங்கம் வகிக்க முடியாது எனவும் அவர் மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டக்களப்பு வீடொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் கண்டெடுப்பு



மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நல்லையா வீதியில் உள்ள வீடொன்றிலிருந்தே இந்த சடலம் கடந்த திங்கட்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் ஓர் அறையில் தங்கியிருந்த செல்வரெட்னம் குலேந்திரன் என்னும் 73 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மட்டக்களப்பு மத்திய வீதியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தில் கணக்காளராக கடமையாற்றி வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அவர் நோய்வாய்ப்பட்டு மருத்துவ சிகிச்சையும் பெற்று வந்த நிலையிலேயே, இவ்வாறு உயிரிழந்துள்ளார் என மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி ஜீவரெட்னம் இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தார்.

அவரின் பணிப்புரைக்கு இணங்க சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மக்களின் உரிமைகளை அடக்கும் விடயங்கள் எவையும் அவசரகால சட்ட விதிகளில் இல்லை

எதிர்க்கட்சியினர் தெரிவிப்பதுபோல் மக்களின் அடிப்படை உரிமைகளை அடக்கும் விடயங்கள் எவையும் அமுல்படுத்தி இருக்கும் அவசரகால சட்டத்தில் இல்லை. மாறாக அத்தியாவசிய உணவுப் பொருள்களை மறைத்து வைக்காமல் விநியோகிக்கும் நடவடிக்கையே இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது என நீதி அமைச்சர் அலிசப்றி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமுலுக்குக்கொண்டுவரப்பட்ட அவசரகால சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஜனாதிபதியின் அறிவிப்பின் முதலாவது பகுதியில் பொருள்கள் பதுக்கி வைத்திருந்தால் அவற்றை கைப்பற்றி நியாயமான விலைக்கு விற்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் பாவனையாளர்கள் தான் நன்மை அடைவர். இதனைப் பயன்படுத்தி எவ்வாறு வேறு நோக்கங்களை நிறைவேற்ற முடியும்.

நுகர்வோர் அதிகார சபையின் வாயிலாக இவற்றை செய்ய முடியாதா எனக் கேட்கின்றனர். ஆனால் உத்தரவாத விலையை நிர்ணயித்து அதிக விலைக்கு விற்றால் வழக்கு தொடர மட்டுமே இதனால் முடியும். ஆனால் நடைமுறையில் இருக்கும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

நாட்டின் மொத்த உள்நாட்டு தேவையில் 18 வீதம் தான் இங்கு உற்பத்தியாகிறது. 82 வீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. அதனை வியாபாரிகள் பயன்படுத்தி மக்களை சூறையாடுகின்றனர். இதனைக் கட்டுப்படுத்தவே ஜனாதிபதி அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுத்தார். - என்றார்.

### நாட்டில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 184 பேரில் 87 பெண்களும், 97 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதில் 03 ஆண்கள், பெண் ஒருவர் என 04 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 26 ஆண்கள், 20 பெண்கள் என 46 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 134 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 68 ஆண்களும், 66 பெண்களும் அடங்குகின்றனர்.

### 2, 960 பேருக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எண்ணிக்கை 4 இலட்சத்து 71 ஆயிரத்து 859 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,769 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 88 ஆயிரத்து 278 ஆக உயர்வடைந்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### அரசுக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டமூலம், உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

சிங்கள பௌத்த பேரினவாத காலனித்துவ ஆதிக்க ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலும், ஆயுத ரீதியிலும் போராடும்போது அதனை ஒடுக்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் 30 ஆண்டுகளாக தமிழர்களை வேட்டையாடியது. எங்களின் பெண்களை சித்திரவதை செய்வதற்கும், எங்களின் இளைஞர்களைக் கேட்பாரின்றி கொலை செய்வதற்கும், எங்களது தேசத்தின் செல்வங்களைக் கொள்ளையடித்து தென்னிலங்கைக்குக் கொண்டு வரவும் அன்று அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். ஆனால், இன்று சிங்கள மக்களிடமிருந்து வரும் எதிர்ப்பை சமாளிப்பதற்காக அவசரகாலச் சட்டத்தை மீண்டும் கொண்டு வந்துள்ளீர்கள். இந்தப் போக்கு உங்களை அதல பாதாளத்துக்குக் கொண்டு செல்லும்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் குளத்துக்குக் கீழ் 178 ஏக்கரில் விவசாயக் காணி 1972ஆம் ஆண்டு முதல் உறுதிகள் வழங்கப்பட்டு விவசாயிகளால் விவசாய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த விவசாய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துமாறு பௌத்த பிக்கு ஒருவரால் ஜனாதிபதி செயலகத்துக்கும், முல்லைத்தீவு வன இலாக்காவுக்கும் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

அதேபோன்று மயிலத்தமடுவில் இந்த வருடம், ஆகஸ்ட் மாதத்தில் இருந்து சிங்கள மக்கள் வெளியேறுவார்கள் என்று அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தது. அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் அவர்கள் விலகி விடுவார்கள் என்று தெரிவித்திருந்தார். ஆனால், அங்கு தமிழ் மக்களின் மாடு வளர்ப்பு நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் அங்குள்ள சிங்கள மக்கள் சில காரியங்களைச் செய்கின்றனர். ஆகவே, அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு செயற்படும் மகாவலி அதிகார சபைக்கு எப்படி உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன உதவிகளை வழங்குகின்றன என்ற கேள்விகளை எழுப்புகின்றேன்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் அரசியல் பழிவாங்கல் தொடர்கின்றது. அங்கு வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகளை வழங்கும் போது புள்ளித்திட்டத்தை வழங்கி அதில் முன்னுரிமை அடிப்படையில் வீடுகளை வழங்க வேண்டும் என்பதே நடைமுறையாகும். இதன்படி செயற்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இராஜாங்க அமைச்சரால் அது தொடர்பான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட அரச அதிபரும் அவரின் மேல் முறையீடு தொடர்பில் ஆராயாது அந்த உத்தியோகத்தரின் இடமாற்றத்துக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார். அந்த உத்தியோகத்தர் முறையாக நடந்துகொண்ட போதும் அவரைப் பழிவாங்கும் வகையில் இந்த நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலும், வடக்கு மாகாணத்திலும் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. இறந்தவர்களின் உடல்கள் வைத்தியசாலைகளில் தேங்குகின்றன. யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலுமே அதனைத் தகனம் செய்ய முடியும்.

வடக்கு மாகாணத்துக்கு இரண்டு தகனசாலைகளே உள்ளன. இதனால் அநுராதபுரத்துக்கும் பொலனறுவைக்கும் இந்த உடல்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இது உறவினர்களுக்கு விருப்பமில்லை. இதனால் உடனடியாக இந்த உடல்களை அந்தந்த மாவட்டங்களிலேயே எரிப்பதற்கான தகனசாலைகளை அமைக்க வேண்டும். அல்லது விறகுகளைப் போட்டு அவற்றை எரிப்பதற்கான வது நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

### இராணுவத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் அலுவலகத்தில் அதன் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் பிற்பகல் 3 மணியளவில் நினைவேந்தல் இடம்பெற்றது.

1996ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி யாழ்.சுண்டிக்குளி கல்லூரி மாணவி கிருஷாந்தி வீதியால் சென்று கொண்டிருந்த வேளை செம்மணி பகுதியில் அப்போதிருந்த இராணுவ முகாமில் வழிமறித்த இராணுவத்தினர் அவரைச் சித்திரவதையின் பின் படுகொலை செய்தனர் என்று நீதி விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளது.

81 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவரங்கள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 02 பேர், நல்லூரில் 02 பேர், சண்டிலிப்பாயில் ஒருவர், உடுவிலில் ஒருவர், தெல்லிப்பழையில் ஒருவர், கோப்பாயில் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று உயிரிழந்த பெண் ஒருவருக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே நேற்றுக் காலை தென்மராட்சியின் மட்டுவில் பகுதியில் உயிரிழந்த 65 வயதுப் பெண்ணுக்கும் அன்டிஜன் பரிசோதனை ஊடாக கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் யாழ்ப்பாணத்தில் நேற்று கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டவர்களின் எண்ணிக்கை பத்தாகும்.

# தேசியப்பட்டியல் ஊடாக சபைக்கு வருகின்றார் யோஷித்த ராஜபக்ஷ?

## 'மொட்டு' அணிக்குள் ஒரு தரப்பு கடும் எதிர்ப்பு

நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்படவுள்ள நிலையில் அவரின் அந்த தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் பிரதமர் அலுவலக பிரதானி யோஷித்த ராஜபக்ஷவை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என அறிய முடிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் விசேட கோரிக்கையையடுத்தே அஜித் நிவார்ட் கப்ரால் தனது அமைச்சுப் பொறுப்பையும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜிநாமா செய்யவுள்ளார்.

எவ்வாறாயினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித்த ராஜபக்ஷ, தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வருவதற்கு ஆளும்கட்சிக்குள் ஒரு தரப்பால் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவின் வருகைக்காகத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை இராஜிநாமா செய்த ஜயந்த கெட்டகொடவுக்கு மீண்டும் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை வழங்க வேண்டும் என்று குறித்த தரப்பால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மஹிந்த இத்தாலி பயணம்

## பாப்பரசரைச் சந்திக்கவும் ஏற்பாடு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் இத்தாலிக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இத்தாலி பொலொக்னா பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் மாநாடொன்றில் கலந்து கொள்ளச் செல்லும் பிரதமருடன், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் செல்லவுள்ளார்.

மேற்படி மாநாட்டின் பின்னர் வத்திக்கானுக்குச் செல்லவுள்ள பிரதமர் மஹிந்த, அங்கு புனித பாப்பரசரைச் சந்தித்து ஆசி பெறவுள்ளார்.

அதேபோல் இலங்கையில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தும் பிரதமர் அங்கு பாப்பரசருக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முக்கிய பிரதிநிதிகளைப் பிரதமர் இந்த விஜயத்தின்போது சந்திப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



இந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு அமைச்சர் பீரிஸ், நேரடியாக அமெரிக்கா சென்று ஐ.நா. பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

பிரதமர் மஹிந்த நாடு திரும்பிய பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

# நுவரெலியாவில் யுவதி மாயம்; தேடுதல் வேட்டையில் எஸ்.ரி.எவ்.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா தோட்டத்தின் 2ஆம் கட்டைப் பிரிவில் காணாமல்போயுள்ள 25 வயது தமிழ் யுவதியைத் தேடும் நடவடிக்கையில் விசேட அதிரடிப்படை களமிறக்கப்பட்டுள்ளது.

குறித்த யுவதி தனது பாட்டியுடன் காட்டுப்பகுதிக்கு, விறகு சேகரிப்பதற்குச் சென்றிருந்த நிலையிலேயே கடந்த 5 ஆம் திகதி திடீரென காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில் குறித்த யுவதியின் தந்தை பொலிஸ் நிலையத்தில் 5ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார்.

மாயமான யுவதி சிறிது காலம் புத்தி சுயாதீனமற்று காணப்பட்ட நிலையில், சிகிச்சை பெற்று வந்துள்ளார் என யுவதியின் தந்தை பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

யுவதி காணாமல்போன பகுதியில் சில இடங்களில் இரத்தக் கறைகள் காணப்படுகின்றன எனவும், சிலவேளை யுவதியை சிறுத்தை தாக்கி இழுத்துச்சென்றிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே, தேடுதல் வேட்டையில் விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

ஜெயபாலன் நிலானி என்ற யுவதியே இவ்வாறு விறகு தேடச் சென்ற நிலையில் காணாமல்போயுள்ளார்.

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 178 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### உயிரிழந்த ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வில், அவரது திருவுருவப் படத்துக்கு ஒளிதீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அவர் தொடர்பான நினைவுரையை வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார் நிகழ்த்தினார்.

காலைக்கதிர் Kalaikkathir



# விறகுகளைக் கொண்டு எரியூட்ட சடலங்களுக்கு அனுமதியில்லை!

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் கொவிட் தொற்றினால் இறந்தவர்களை தகனம் செய்வதற்கான நடவடிக்கையில் விறகுகளை கொண்டு எரியூட்டுவதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

தற்போது கொவிட் தொற்றுக்கான மரணவீதம் சற்று கடுதியாக உள்ளதாகவும், யாழ் மாவட்டத்திலே தகனம் செய்வதற்கான நடவடிக்கையை யாழ் மாநகர சபை மட்டுமே கொண்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

யாழ் மாவட்டத்தின் கொவிட் தொற்று நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடகசந்திப்பு நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற போது அவர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

முதலில் தகனம் செய்யும் போது மூன்று உடல்கள் தகனம்செய்யப்பட்டன, பின்னர் அந்த எண்ணிக்கை நான்காகவும், ஐந்தாகவும் அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக உடல்களை வவுனியாவுக்கு அனுப்பியுள்ளனர்.

அங்கிருந்து அநுராதபுரத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தகனம் செய்வதற்கான நடவடிக்கையில் விறகுகளை கொண்டு எரியூட்டுவதற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை.

மின்தகனம், எரிவாயு போன்றதகனங்கள்தான் செய்யவேண்டும் என சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்துகின்றனர். மேலும் புதிதாக தகனம் செய்வதற்கான அமைவிடங்களை அமைப்பதற்கான வழிவகைகள் இதுவரையும் ஏற்படுத்தப்படவில்லை. அதுதொடர்பிலான ஆலோசனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனிடையே, பொதுமக்கள் நாட்டில் அமுலாக்கப்பட்டு இருக்கும் ஊரடங்கு சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யாது தங்களையும் பாதுகாத்து சமூகத்தையும் பாதுகாக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கையில் முதலாவது தடுப்பூசி 2 லட்சத்து 95 ஆயிரத்து 315 நபர்களுக்கும், இரண்டாவது தடுப்பூசி 2 லட்சத்து 15 ஆயிரத்து 552 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் அதிகளவான கொவிட் மரணங்கள்; இறுக்கமான முடக்கத்தை நீடிப்பது சிறந்தது

## இலங்கை மருத்துவ சங்கம்

நாட்டில் தற்போது டெல்டாவின் பிறழ்வுகளே வேகமாகப் பரவுகின்றன. இந்த பிறழ்வுகளே தொற்றாளர்கள் தீவிர நிலைமையை அடைவதற்கும் மரணங்களின் வீதம் அதிகரிப்பதற்கும் ஏதுவாய் அமைந்துள்ளன.

எனவே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்றல்லாமல் மிகவும் இறுக்கமான முடக்கம் மேலும் இம்மாதம் 18 ஆம் திகதி வரையேனும் நீடிக்கப்படுமானால் சிறந்த பிரதிபலனைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

புதிதாக உருவாகிய அலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பமாகநாம்இதனைக்காண்கின்றோம். போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் காரணமாகவே வைத்தியசாலைகள் நிரம்பி வழியக்கூடிய நிலைமையைக் கட்டுப்படுத்த முடிந்தது. அதே போன்று மரணங்களின் எண்ணிக்கையும் கணிசமானளவு குறைவடைந்துள்ளது.

இதே நிலைமையிலேனும் இம்மாதம் 18 ஆம் திகதி வரை முடக்கம் நீடிக்கப்படுமாயின் சிறந்த பிரதிபலனைப் பெற முடியும். இவற்றுக்கிடையில் தடுப்பூசி வழங்கும் பணிகளையும் துரிதமாக முன்னெடுத்துச் செல்வதும் அத்தியாவசியமானதாகும்.

எனினும் முழுமையான தடுப்பூசி வழங்கலை நிறைவு செய்தாலும் முடக்கம் தளர்த்தப்பட்டதன் பின்னரும் சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது பிரதானமானதாகும்.

# பாரிஸுக்கு மீண்டும் நேரடி விமான சேவை

## நவம்பர் முதலாம் திகதியிலிருந்து



*பிரான்ஸ் தலைநகர் பாரிஸுக்கு மீண்டும் நேரடி விமான சேவைகளை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது.*

*அதற்கமைய, எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சார்ள்ஸ் டி கோல் விமான நிலையத்துக்கு, வாரத்தில் மூன்று நாட்கள் விமான சேவையை முன்னெடுக்கவுள்ளது.*

*இந்தச் சேவையில் எயார் பஸ் ஏ 330 - 300 வகை விமானத்தை ஈடுபடுத்தவுள்ளதுடன், இந்த விமானங்கள் வாரத்தில் புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமை ஆகிய மூன்று நாட்களில் மு.ப 12.35 மணிக்கு கட்டுநாயக்கவிலிருந்து புறப்படவுள்ளன.*

*இவ்விமானம் மறுநாள் காலை 7.30 மணிக்கு பாரிஸை சென்றடையும் என்றும் மீண்டும் அங்கிருந்து அன்றைய தினம் பிற்பகல் 2.30மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 5.20மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.*

# வெள்ளை வான் கலாசாரத்துக்கு கோட்டாபயவே தலைமை வகிப்பு!

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன போட்டுடைப்பு

வெள்ளை வான் கலாசாரத்திற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே தலைமை வகிக்கிறார் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

வீடுகளிலேயே இருக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசியை ஏற்றுவதற்கு படையினர் வெள்ளைவான்களிலேயே செல்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார். மேலும் தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் வெள்ளை வான் கலாசாரம் தலைதூக்குமெனகடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பிரசாரம் செய்யப்பட்டது.

அதற்காக முதலைக்கண்ணீர் வடித்தனர். ஊடகவியலாளர் சந்திப்பில் படம் காட்டப்பட்டது. முன்னாள் சுகாதார அமைச்சரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பங்குபற்றிய இருவர் சிறையில் உள்ளனர்.

வெள்ளைவான் கலாசாரத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே தலைமை வகிக்கின்றார்.


கொவிட் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியாமல் வீடுகளிலேயே இருக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசியை ஏற்றுவதற்கு படையினர் வெள்ளை வான்களிலேயே செல்கின்றனர்.

அவ்வாறு வெள்ளை வான் கலாசாரத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே மாற்றியுள்ளார்.

வெள்ளை வான்களில் சென்று தடுப்பூசியை ஏற்றாவிடின், வீடுகளுக்குள்ளே முடங்கியிருப்போரின் நிலைமை என்னவாகியிருக்கும் என கேள்வியெழுப்பியுள்ளார்.

# மோசமானதொரு மௌன வன்முறைக்கு எமது நாடு முகம் கொடுத்து நிற்கின்றது!

## டக்ளஸ் வேதனை



எமது நாடு மிக மோசமானதொரு மௌன வன்முறைக்கு முகம் கொடுத்து நிற்கிறது. மௌனமாகவே வருகிற நோய் மௌனமாகவே போகின்ற மக்கள், ஒருவருடைய உடலைத் தூக்கிச் செல்வதற்குக் கூட யாரும் முன்வரமுடியாத ஓர் அபாக்கியமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

சாண் ஏற முழம் சறுக்கும் என்பார்கள். எமது நாட்டிலும் இவ்வாறான நிலையே காணப்படுகிறது. நாட்டில் கொவிட் தொற்று நாளாந்தம் 200 இற்கு மேற்பட்ட மரணங்களையும் 3 ஆயிரத்தைத் தாண்டிய எண்ணிக்கையிலான தொற்றாளர்களையும் கண்டுகொண்டிருக்கிறது.

எமது நாடு கடந்த காலங்களில் ஆயுதம் ஏந்திய வன்முறைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. இன்று எமது நாடு மிக மோசமானதொரு மௌன வன்முறைக்கு முகம் கொடுத்து நிற்கிறது.

மௌனமாகவே வருகிற நோய் மௌனமாகவே போகின்ற மக்கள், ஒருவருடைய உடலைத் தூக்கிச் செல்வதற்குக் கூட யாரும் முன்வரமுடியாத ஓர் அபாக்கியமான சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

இத்தகைய மிகை அனர்த்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு என நாட்டை முடக்குமாறு சுகாதாரப் தரப்பினர் கோரி வருகின்றனர்.

மறுபக்கத்தில் நாட்டை முடக்கி வைப்பதன் மூலம் பொருளாதார ரீதியாக பாரிய பின்னடைவினை நாடு எதிர்கொள்ளுகிறது எனப் பொருளாதார வல்லுநர்கள் கூறிவருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.09.2021 இல் வெளியிடப்பெற்றது.